# எழுநிலம்

மாத இதழ் | மணம்- 4 | ஜூலை 2021 | திருவள்ளுவர் ஆண்டு 2052



## கறுப்பு ஜூலை 1983 நினைவுகள்



இவர் நாமம் ஒரு காலம்
தமிழீழம் பேசும்!

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த தன்மையான் ஆளப்படும்

எழுநிலம்

Ezhunilam

# எழுநிலம்

ஜுலை 2021

தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com

## திருக்குறள்



குறள்

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப்படும்.

உரை

நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் செயலுக்கு உரியவனாக ஆளப்படுவான்.

## ஆசிரியர் பக்கம்

# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

தமிழர் தாயகமும் சிங்கள தேசமும் ஒன்றாக்கப்பட்டு 'இலங்கை' என்ற பெயரில் பிரித்தானிய காலனியாதிக்கத்துக்குள் இருந்ததும், பிரித்தாளும் தந்திரத்துடன் அவர்கள் அதை சிங்களவர்களிடம் விட்டுச் சென்றதும் நாம் அறிந்ததே. அன்றே வெளிப்படையாக ஆரம்பித்தது தமிழின துவேசமும் தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற வெறியும். இவை காலத்திற்குக் காலம் தமிழர்களுக்கு எதிரான கலவரங்களாகக் கட்டவிழ்த்து விடப்பட்டன.

1956 இல், தமிழர்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தின் புதிய குடியேற்றமான 'கல்லோயா' வில் தமிழர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்ட போது, இலங்கையின் சுதந்திரத்தின் பின்னான முதலாவது தமிழின அழிப்புக் கலவரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது 150 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஆவணங்கள் உறுதி செய்கின்றன. உடனேயே 1958 இல் அடுத்த இனப்படுகொலை. இதன்போது தமிழர்களாகவிருந்த ஒரே காரணத்துக்காக, 300 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர், ஆயிரக்கணக்கானோர் வாழ்விடங்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு ஏதிலிகளாக்கப்பட்டனர், தமிழர் சொத்துக்கள் சூறையாடப்பட்டன, எஞ்சியவை எரியூட்டப்பட்டு அழித்தொழிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழன் என்ற இனத்தையே ஒழிக்கவேண்டும் என்ற நோக்கில், கூட்டம் கூட்டமாக வந்த சிங்களக் காடையர்களால் தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

66 இல் நடந்த கலவரத்தின் பின், நாடு முழுவதும் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 77 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திலேயே அடுத்த கலவரம் கட்டவிழ்த்து விடப்பட, 300 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 1981 இல் எவராலுமே மறக்கமுடியாத, மறக்கக்கூடாத யாழ் நூலக எரிப்பு. அதைத் தொடர்ந்த

ரத்தினபுரி, கஹேவத்த, பலாங்கொட பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட வன்முறைகள் என்று இன்றும் நீண்டுகொண்டே இருக்கின்றது பட்டியல். இவையெல்லாமே தமிழர்களின் வாழ்வின் துன்பியல் நிகழ்வுகள். வரலாற்றில் எமக்கு விழுந்த அடிகள்.

இவை எல்லாவற்றையும் புரட்டிப்போட்டுவிட்டது 1983 ஆடிக் கலவரம். இது தமிழ் இளைஞர்களின் மனதில் மாற்றத்தைக் கொண்டுவரவும், ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் தங்களை இணைத்துப் போராடவுமான மாபெரும் உந்து சக்தியாக அமைந்துவிட்டது. தமிழர் வாழ்வின் திருப்புமுனையான ஆடிக்கலவரம் நிகழ்ந்து 38 வருடங்களாகிவிட்டன.

பொதுமக்கள் மீது அரச பயங்கரவாத வன்செயல்களை ஏவி விடும் ஆயுதப்படையினர் தண்டிக்கப்படுவார்கள் என்பதை அரசுக்கு உணர்த்தும் நோக்கில் இரவு ரோந்து வரும் இராணுவ வாகனத்தின் மீது தாக்குதல் தொடுத்தனர் விடுதலைப் புலிகள். இதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டு இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

'தமிழ் மக்கள் பற்றி எனக்கு அக்கறை கிடையாது. தமிழ் மக்களின் உயிர்களைப் பற்றியோ, அவர்கள் எம்மைப் பற்றி என்ன கருத்து வைத்திருக்கிறார்கள் என்பது பற்றியோ சிந்திக்க முடியாது' என்று பகிரங்கமாகப் பேட்டியளித்த அப்போதைய சனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு இத்தாக்குதல் பெருத்த அவமானமாகப்பட்டது. விளைவு, யாழில் இராணுவத்தினரின் வெறியாட்டத்தில் 60 பேர் கொல்லப்பட்டனர். கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டன. கலவரம் நாட்டின் மற்றைய பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, தமிழர்களுக்கெதிரான மாபெரும் இனக்கலவரமாக வெடித்தது.

ஏற்கனவே இருந்த திட்டப்படி வெலிகடைச் சிறையில் இருந்த தமிழ்க் கைதிகள் காட்டுமிராண்டித்தனமாக கண்கள் பிடுங்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்கள் வாழ்விடங்களிலிருந்தும் வேலையிடங்களிலிருந்தும் அடித்து விரட்டப்பட்டனர். சுட்டும், வெட்டியும், அடித்தும், எரித்தும் குரூரமாகக் கொல்லப்பட்டனர். பெண்கள் தமது குடும்பத்தின் கண்முன்னேயே பாலியல் கூட்டு வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டனர். 3000 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். இலட்சக்கணக்கானோர் ஏதிலிகளாயினர். பல்லாயிரக்கணக்கானோர் நாட்டைவிட்டுத் தப்பியோடி புலம் பெயர் தேசங்களில் தஞ்சம் கோரினர். தமிழர்களுக்கெதிரான இனப்படுகொலையை உலகம் உன்னிப்பாகக் கவனித்தது. தாயகத்தில் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றது.

விடுதலைப் புலிகளின் வளர்ச்சி சிங்கள அரசுக்கு பேரிடியாகவும் தமிழர்களுக்கு காப்பரணாகவும் அமைந்தது. தாயகப் பிரதேசத்தில் மக்களால் நிம்மதியாக நடமாட முடிந்தது. மக்களுக்கான இந்தப் போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களில் ஒன்றே 'கரும்புலிகள்'. மக்கள் மனங்களில் நிலைத்திருக்கும், மக்களுக்காக தம்முயிரைக் கொடையாக்கிய அனைத்து கரும்புலிகளையும் ஜுலை 5 'கரும்புலிகள் நாளில்' நினைவு கூருகின்றோம். போற்றி வணங்குகின்றோம்.

சர்வதேசத்தின் கூட்டுச் சதியால், தமிழர்களுக்குப் பாதுகாப்பாகவிருந்த ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டுவிட்டன. தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழர்கள் இன்றும் திக்கற்றவர்களாக, அரசியல் அனாதைகளாக வாழ்கின்றனர். 2009இல் நடந்த ஒரு மாபெரும் இனவழிப்பின் பின்பும் தமிழ் மக்களிற்கெதிரான சிங்கள அரசின் செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. தமிழர் பிரதேசங்களில் தொடர்ச்சியான சிங்களக் குடியேற்றங்கள், ஆலயங்களை விகாரைகளாக்குவது, கலாச்சாரச் சீரழிவு, தமிழர் பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் சிங்கள நாடாக்க முனைதல், கல்வித்தடை என்று எண்ணிலடங்கா வழிகளில் தமிழர்கள் குறிவைக்கப்பட்டுள்ளனர். இப்போது திட்டமிட்ட வகையில் எங்கள் வரலாற்றை திரிபுபடுத்தி இழிவாகக் காட்டும் பிரசாரமும் முனைப்புடன் நடைபெறுவதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

நாம் கடந்து வந்த வலி மிகுந்த பாதைகள் உலகின் அடக்கப்படும் இனங்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டு. எங்கள் மீது எய்யப்பட்ட குண்டு மழைகளை யாரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. வீட்டிலோ அயலிலோ நிச்சயமாக ஒருவராவது களப்பலியாகி இருப்பார், காணாமற் போயிருப்பார் அல்லது கொல்லப்பட்டிருப்பார். அப்படியிருந்தும் நாங்கள் ஏன் ஒரு வீரியம்மிக்க இனமாக எழவில்லை? தாழ்ந்து கிடக்கும் தமிழினத்தை தலை நிமிரவைக்க ஒன்றிணையவில்லை? எங்கள் ஆற்றல்கள் சிதறுண்டு கிடப்பதுதான் எமது பலவீனம். எமது விடுதலையை யாரும் எங்களுக்குப் பெற்றுத்தரப் போவதில்லை. நாம்தான் போராடியாக வேண்டும். ஒன்றிணைவோம். எங்கள் கரங்களைப் பலப்படுத்துவோம். தாயக விடுதலை நோக்கி முன்னேறுவோம்.

**'நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல்**
**நாடு பெரிதென்று வாழுங்கள்'**

**தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்.**

# கறுப்பு ஜூலை

## நீதி இல்லை நியாயமும் இல்லை

- பி.மாணிக்கவாசகம் -

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை தொடர்ச்சியாக மறுத்து வந்த பேரின ஆட்சியாளர்களின் பிடிவாதப் போக்கே இலங்கையை அமைதி யிழந்த நாடாக - அமைதியற்ற நாடாக்கி உள்ளது. அந்த அமைதியின்மையின் அடையாளங்களில் 1983 கறுப்பு ஜுலை வன்முறைகள் மிக முக்கிய வன்முறையாகப் பதிவாகி இருக்கின்றன.

இந்த நாட்டின் பாரம்பரிய வரலாற்று உரிமையைக் கொண்ட குடிமக்கள் என்ற ரீதியில் தமது உரிமை களுக்காக தமிழ் மக்கள் நீண்ட காலமாகப் போராடி வருகின்றார்கள். அவர்களுடைய சாத்வீகப் போராட்டம் தோல்வி அடைந்ததனாலும், இணக்கப் பேச்சுக்களும், பேச்சுவார்த்தைகளும், பேச்சுக்களின் பின்னர் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் தோல்வி அடைந்ததன் விளைவாகவே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைக்க நேர்ந்திருந்தது.





தமிழர்களின் அரசியல் உரிமைகளுக்கான இனப்பிரச்சினையை அரசியல் வழிமுறையில் தீர்ப்பதற்கு ஆட்சியாளர்கள் எவருமே முற்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது சில கண்துடைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவே தவிர அரச தரப்பில் எவரும் இதய சுத்தியுடனும், தேசப்பற்றுடனும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வரவில்லை.

மாறாக அரச பயங்கரவாதத்தையே பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கானதோர் உத்தியாகக் கடைப்பிடித்திருந்தனர். இன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அடித்து நொறுக்கி தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி இரண்டாந்தரக் குடிமக்களாக்குவதற்கான முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சிங்களம் மட்டுமே என்ற இனவாதச் சட்டத்தைக் கொண்டு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சி தொடக்கம், எவரும் தனிநாடு கோர முடியாது என ஆறாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன வரையிலான ஆட்சியில் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் பகிரங்கமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன.

முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவின் சிங்களம் மட்டும் என்ற மொழிவாத இனவாத சட்டத்தி-

னால் உருவாகிய வன்முறையில் தமிழ் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் எரித்தும், கொதிக்கும் தார் பீப்பாய்களில் தூக்கிப் போடப்பட்டும் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். எண்ணற்றவர்கள் உடைமைகளையும் உறைவிடங்களையும் இழந்து அகதிகளாகினார்கள்.

## ஆறாத சோகம் மாறாத துயரம்

முன்னாள் ஜனாதிபதி ஜேஆர் ஜயவர்தனவின் ஆட்சியில் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம் பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அரசியல் வழியில் தீர்க்கமான திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அரங்கேற்றப்பட்டது. இந்த வன்முறைகள் ஒரு வார காலம் நீடித்தன. இதில் தமிழ் மக்களின் பொருளாதாரம் முற்றாக அழிக்கப்பட்டது. வீடுகள் தொழிற்சாலைகள், உற்பத்தி இடங்கள் என்பன முழுமையாகத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

நாலாயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டார்கள். சுமார் ஒன்றரை லட்சம் பேர் சொந்த இருப்பிடங்களையும் வசிப்பிடங்களையும் இழந்து அகதிகளாயினர். தலைநகர் கொழும்பில் இருந்தும், அதன் சுற்றயல் பிரதேசங்களில் இருந்தும் நாட்டின் முக்கிய பிரதேச நகரங்களில் இருந்தும் தமிழ் மக்கள் அடித்து நொறுக்கி, வடமாகாணத்தை நோக்கியும் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளை நாடியும் ஓடுமாறு துரத்தப்பட்டார்கள்.

இந்த 1983 கறுப்பு ஜூலை வன்முறை தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட அப்பட்டமான அரச பயங்கரவாதமாகவும், ஆட்சியாளர்களின் மிக மோசமான இன அழிப்பு நடவடிக்கையாகவும் வரலாற்றில் பதிவாகி உள்ளது.

இலங்கையில் தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக ஏதிலிகளாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற யதார்த்தத்தை உலகுக்கு கறுப்பு ஜூலை வன்முறைகளே பறைசாற்றின. பேரினவாதிகளாகிய சிங்கள அரசியல்வாதிகளும், அவர்களுடைய ஆதரவாளர்களும் அடியாட்களுமாகிய சிங்களவர்களும் எந்த அளவுக்குக் கொடுமையானவர்கள், கொடூரமானவர்கள் என்பதை இந்த வன்முறைகள் வெளிப்படுத்தின.

கறுப்பு ஜூலை வன்முறைகள் இடம்பெற்று மூன்றரை தசாப்தங்களுக்கும் மேலாகின்றன. ஆனால் அந்தக் கொடுமைகளின் மன வடுக்கள் தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத புண்களாக இன்னும் படிந்திருக்கின்றன. முப்பத்தேழு வருடங்கள் கழிந்த பின்னரும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி அந்தப் பாதிப்புகளுக்கு உள்ளாகிய குடும்ப உறுப்பினர்களின் மனங்களில் ஆறாத சோகமாக ஆற்ற முடியாத துயரமாகவே இன்னும் தொடர்கின்றன.



உயிருக்காகப் போராடிய அந்த வன்முறைத் தருணங்களின் காட்சிகள் இன்னும் பலருடைய மனங்களில் தத்ரூபமாக நிழலாடுகின்றன. அவற்றை எண்ணுந்தோறும் அவர்கள் ஆறாத துயரங்களுக்கு ஆளாகின்றார்கள்.

யாழ்ப்பாணம் தின்னவேலி தபால் பெட்டிச் சந்தி - 1983 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி நள்ளிரவு நேரம். விடிந்தால் 23 ஆம் திகதி. பலாலியில் இருந்து யாழ் நகரை நோக்கி வந்த இராணுவ வாகனத் தொடரணி மீது விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடி மற்றும் துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவமே கறுப்பு ஜூலை வன்முறைகளுக்கு முக்கிய காரணம் என பொதுவாகக் கூறப்படுகின்றது. ஆனால் உண்மை அதுவல்ல. தனிநாட்டுக் கோரிக்கையை ஆணையாகக் கொண்டு 1977 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அடைந்த வெற்றியும், அதன் மூலம் தமிழ் மக்கள் அரசியல் போராட்ட ரீதியில் கொண்டிருந்த எழுச்சியை அடக்கி ஒடுக்குவதற்கு அன்றைய ஆட்சியாளர்கள் கங்கணம் கட்டியிருந்தார்கள்.

அது மட்டுமல்லாமல், தனிநாடு கோரி தேர்தலில் அமோக வெற்றியீட்டி நாட்டின் எதிர்க்கட்சியாகப் பரிணமித்திருந்த தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தகுந்த பாடம் படிப்பிக்க வேண்டும் என்று அன்றைய ஆட்சியாளர்கள் மத்தியில் எழுந்திருந்த வன்மமும் கறுப்பு ஜூலை வன்முறைக்கான அடித்தளமாகும்.

தனிநாடு கோரி அரசியல் ரீதியாக பெற்றிருந்த எழுச்சிக்கு மத்தியிலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் உள்ளிட்ட முக்கிய தமிழ்த்தலைவர்களைத் தம்வசப்படுத்திய அன்றைய ஜனாதிபதி ஜேஆர் ஜயவர்தன, அவர்களை மாவட்ட அபிவிருத்திச் சபை முறையிலான ஆட்சி முறைமைக்கு இணங்கச் செய்திருந்தார்.

இதனையடுத்து 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான தேர்தலில் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனத்தையாவது கைப்பற்றி அரசியல் ரீதியாக அங்கு கால் ஊன்றிவிட வேண்டும் என்று ஜயவர்தன கடும்போக்கில் செயற்பட்டிருந்தார். அதன் விளைவாகவே அமைச்சர்களின் தலைமையிலான குண்டர்களினாலும் விசேட பொலிஸ் அணியினராலும் யாழ் நூலகம் எரியூட்டி அழிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் இல்லத்திற்கும், ஈழநாடு பத்திரிகை அலுவலகத்திற்கும் தீ வைக்கப்பட்டது. யாழ் நகரத்தையும், புறநகர்ப்புறங்களையும் அந்தக் குண்டர்கள் எரித்து அழித்தார்கள். பலர் கொல்லப்பட்டனர்.

யாழ் வன்முறைகளைத் தொடர்ந்து கொழும்பிலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் தமிழர்கள் மீது குறிப்பாக வர்த்தக சமூகத்தினர் மீதான பொருளாதாரம் மற்றும் இன அழிப்புக்கான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவதற்கான திட்டம் தீட்டப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு இராணுவத்தினர் மீதான தின்னவேலி தாக்குதலும், அதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டமையும் வாய்ப்பாக அமைந்துவிட்டன.

## குழந்தைகளையும் எரிகின்ற காருக்குள் இழுத்துக் கொண்ட தந்தை

கறுப்பு ஜுலை வன்முறைகள் கட்டவிழ்ந்திருந்த நேரம். பெட்ரோல் கேன்களையும், தடிகளையும் கைகளில் ஏந்திய வண்ணம் வீதிகளில் வாகனங்களை மறித்த குண்டர்கள், அவற்றில் இருந்த தமிழர்களைத் தேடிப்பிடித்து வெளியில் இழுத்து தாக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு தமிழ்க்குடும்பம் பயணம் செய்த கார் ஒன்று வந்தது. அதனை மறித்து சோதனையிட்ட குண்டர்கள் கணவன் மனைவியுடன் இரண்டு குழந்தைகளுமாகத் தமிழர்கள் இருந்ததைக் கண்டதும், வாகனத்தை அடித்து நொறுக்கினார்கள். பெட்ரோலை



ஊற்றி நெருப்பு வைத்தார்கள்.

அப்போது குண்டர்களில் சிலர் காரினுள் இரண்டு பிள்ளைகள் இருப்பதைக் கண்டதும், அவர்கள் இருவரையும் மாத்திரம் வெளியில் இழுத்து விட்டார்கள். காரில் தீ பரவிக் கொண்டிருந்தது. அந்தப் பிள்ளைகள் இருவரும் வேடிக்கைக்கான காட்சிப் பொருளாக திக்பிரமையுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

திடீரென காரின் முன் கதவு திறந்தது. வெளியில் இறங்கிய அந்தத் தந்தை தனது இரண்டு குழந்தைகளையும் அணைத்து இழுத்துக் கொண்டு காரினுள்ளே சென்று கதவை இறுக்கிப் பூட்டிக் கொண்டார். காரின் உள்ளேயும் வெளியிலும் பரவிய தீ கொளுந்துவிட்டு எரிந்தது.

இந்தக் காட்சியைக் கண்டவர் பசில் பெர்னாண்டோ. அவர் ஒரு சட்டத்தரணி. வத்தளை நீதிமன்றத்தில் வழக்குகளில் முன்னிலையாகி வந்தார். தமிழ் மக்களுடன் அந்நியோன்னியமாகப் பழகி வந்தவர். அந்தக் காட்சி தன்னை திக்குமுக்காடச் செய்திருந்தது என அவர் அந்த வன்முறைகள் குறித்து எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா, இந்த வகையிலும் கொடுமைகள் இடம்பெறுமா என்ற எண்ணங்கள் இதயத்தில் அலைமோதச் செய்த அந்தக் காட்சி அவரை மனதளவில் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியிருந்தது. அந்தக் காட்சியை அவரால் மறக்கவே முடியவில்லை. தாங்கள் எரிந்து சாம்பலாவதைப் பார்த்து உயிர்தப்பிய பிள்ளைகள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகவே அந்தத் தந்தை தனது பிள்ளைகள் இருவரையும் தன்னுடன் மாய்த்துக் கொண்டார் என்பதை தன்னால் சீரணிக்க முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த சம்பவத்தினால் மனப்பாதிப்புக்கு உள்

ளாகிய பசில் பெர்னாண்டோ பின்னர் அதனை ஓர் உணர்வுபூர்வமான கவிதையாக்கியுள்ளார். கறுப்பு ஜூலை வன்முறைகள் பற்றிய பதிவுகள் அடங்கிய தொகுப்பில் அந்தக் கவிதை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதாகவும் அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இது போன்ற மனங்களை உறையச் செய்கின்ற சம்பவங்களில் எத்தனை பேர் உயிரிழந்தார்களோ தெரியவில்லை. முப்பத்தேழு வருடங்கள் கழிந்த பின்னரும், அந்த வன்முறைகளில் இடம்பெற்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் பற்றிய விபரங்கள் இன்னும் முழுமையாகப் பதிவாகவில்லை. பதிவேற்றப்படவில்லை என்றே கூற வேண்டும். உதிரிகளாகப் பல சம்பவங்கள் பற்றிய விபரங்கள் வெளியாகியிருக்கின்ற போதிலும் அவைகளும் ஒரு தொகுப்பாக்கப்படவில்லை.

## குமாரசூரியருக்கு நேர்ந்த கதி

அவர் ஒரு கல்வியியலாளர். தனது பெயரை வெளியிட அவர் விரும்பவில்லை. வன்முறைகள் கட்டுக்கடங்காமல் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது தனது நண்பராகிய ஒரு பொலிஸ் உத்தியோகத்தருடன் அவர் வாட் பிளேஸில் இருந்து புறப்பட்டு கொள்ளுப்பிட்டி வழியாக காலி வீதிக்கு வந்தபோது, காலிவீதியின் இருபக்கங்களிலும் கண்ணுக்கு எட்டிய தூரம் கட்டிடங்கள் எரிந்து கொண்டிருந்ததைக் கண்டதாக அவர் கூறியுள்ளார்.

இந்த கண்கண்ட சாட்சியத்தின்படி, காலி வீதியில் அப்போது காரில் பயணம் செய்வதே கடினமாக இருந்தது. கட்டிடங்களுக்கு வைக்கப்பட்ட தீயின் வெப்பமும் அனலும் வீதியில் பரவி இருந்தது. அந்த வெப்பத்தின் தாக்கத்தைக் காரினுள் இருந்தவாறே உணரக் கூடியதாக இருந்தது. இதனால் அவர்கள் வீதியின் நடுப்பகுதியிலேயே பயணம் செய்ய வேண்டி இருந்தது.



இடையிடையே குண்டர்கள் கட்டிடங்களைத் தாக்குவதையும், வாகனங்களில் தமிழர்களைத் தேடிக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது. குண்டர்கள் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்த அதே வேளை, ஆங்காங்கே இராணுவத்தினரும் சிறு சிறு குழுக்களாக அமைதியாகவே நின்றிருந்தனர்.

வீதியில் மேலும் கீழுமாக இராணுவ வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. திறந்த வாகனங்களில் பயணம் செய்த இராணுவத்தினரைக் கண்டபோதெல்லாம் வன்முறையில் ஈடுபட்டிருந்த கும்பல்களில் இருந்தவர்கள் அவர்களை நோக்கி கைகளை அசைத்து சிங்கள இராணுவம் வெற்றியடைய வாழ்த்துக்கள் என கோஷமெழுப்பினார்கள். ஆனால் இராணுவ வாகனம் எதுவும் வன்முறையில் ஈடுபட்டிருந்தவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக நிறுத்தப்படவுமில்லை. அங்கு நடைபெற்ற அநியாயங்களைக் கவனத்திற் கொள்ளவுமில்லை.

கொள்ளுப்பிட்டியில் இருந்து தெற்கு நோக்கிய பயணம் தொடர்ந்தது. வழியெங்கும் பதட்டம் நிலவியது. அந்த நிலைமை அச்சமூட்டுவதாகவும் அடுத்து என்ன நடக்கப் போகின்றதோ என்று கவலை கொள்ளச் செய்வதாகவும் இருந்தது.

வெள்ளவத்தை விவேகானந்தா வீதிக்கு அருகில் ஒரு பெட்ரோல் ஷெட் - எரிபொருள் விற்பனை நிலையம். அதற்கருகில் ஒரு கும்பல் ஆரவாரமாகக் காணப்பட்டது. அவர்களிடம் அகப்பட்டிருந்த ஒருவர் நீளக்காற்சட்டையும் பெனியனும் மட்டுமே அணிந்திருந்தார். அவருடைய கைகள் கட்டப்பட்டு நீளமான கயிறு ஒன்றினால் பிணைக்கப்பட்டு அவரை இழுத்துச் சென்றுகொண்டிருந்தனர்.

அந்தக் காட்சியைக் கண்டதும் முதலில் திகைப்பாக இருந்தது. நெருங்கிப் பார்த்தபோதுதான் கட்டி இழுத்துச் செல்லப்பட்டவர் சிறிமா பண்டாரநாயக்கா அரசில் அஞ்சல் தொலைதொடர்பு அமைச்சராக இருந்த குமாரசூரியர் என்று அடையாளம் தெரிந்தது.

## அனுதாபமில்லை நீதியில்லை நியாயமும் இல்லை

இந்தக் காட்சியைக் கண்ட கல்வியிலாளருடன் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பதைபதைப்புடன் காரில் இருந்து இறங்கி அவரைக் காப்பாற்றுவதற்கு முற்பட்டார். அவரைத் தடுத்து நிறுத்திய கல்வியலாளர், 'நீங்கள் அங்கு செல்வதால் எதுவும் நடக்கமாட்டாது. அவர்கள் உங்களையும் கொலை செய்வார்கள். அவரைப் பாதுகாக்க முடியாது' எனக்கூறி தடுத்து நிறுத்தினார்.

'குமாரசூரியர்தான் எனது திருமணப் பதிவின் போது முக்கிய சாட்சியாகக் கையெழுத்திட்டார். அவருக்கு ஆபத்து நேர்ந்துவிட்டதே. என்ன செய்வது என்று தெரியவில்லையே' என்று அந்த பொலிஸ் உத்தியோகத்தர் கவலை தெரிவித்தார்.

இதனையடுத்து இருவரும் ஜனாதிபதி ஜயவர்தனவின் மருமகளாகிய சார்மனியின் வீட்டிற்குச் சென்று அவர் மூலமாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்து குமாரசூரியரைப் பாதுகாக்க முற்பட்டனர். அவர்கள் சார்மனியின் வீட்டைச் சென்றடைந்த சில நிமிடங்களில் இராணுவ அதிகாரி ஒருவர் வாகனத்துடன் அங்கு வருகை தந்து சார்மனியை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்வதற்காக தங்களை ஜனாதிபதியே அனுப்பியதாகக் கூறினர்.

அப்போது ஜனாதிபதியிடம் விபரத்தைக் கூறி குமாரசூரியரைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொண்டதையடுத்து உடனடியாகவே வெள்ளவத்தைக்குச் சென்ற இராணுவத்தினர் அடங்கிய குழுவொன்று குமாரசூரியரை நூலிழையில் பாதுகாத்து பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதுபோன்ற பல சம்பவங்களில் பலரும் பலவிதங்களில் பாதிக்கப்பட்டனர். காயமடைந்தனர். உயிரிழந்தனர். அனைத்தையும் இழந்து ஏதிலிகளாகினர். ஆனால் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி ஜயவர்தன உடனடியாக ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தவில்லை. தாமதமாகவே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த ஊரடங்கிலும் குண்டர்கள் சுதந்திரமாக நடமாடவும் வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி தங்கத்துரை உள்ளிட்ட 55 தமிழ் அரசியல் கைதிகள் அடுத்தடுத்து இடம்பெற்ற இரண்டு தாக்குதல் சம்பவங்களில் சித்திரவதை செய்து அடித்து இம்சித்து கொல்லப்பட்டார்கள்.

கறுப்பு ஜுலை வன்முறைகள் இடம்பெற்றபோது நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பில் அனுதாபம் எதனையும் தெரிவிக்கவில்லை. தமிழர்கள் பாதிக்கப்பட்டதாக அவர் காட்டிக்கொள்ளவில்லை. மாறாக யுத்தம் என்றால் யுத்தம் சமாதானம் என்றால் சமாதானம் அதனைத் தீர்மானிக்க வேண்டியது தமிழர்களே என குறிப்பிட்டார். அவருடைய உரை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போன்றிருந்தது. ஏனைய தமிழர்களுக்கு இந்த அரசாங்கம் என்னென்ன செய்யப் போகின்றதோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி இருந்தது.






...r Black July '83' is a ...mpaign designed by the ...g agency JWT for the ... Policy Alternatives (CPA), ...ersial NGO that has come in ...l flak from multiple quarters ...s of financial dishonesty ...g and abetting separatism. ...epeat" is the payoff line. ...aign is to be launched ...e Nation learns. ...July" is remembered ...mbered differently and ...g purposes by those ...mber. Whatever these ...s may be there is ...lity in agreement on one thing: it should never happen again.

There's nothing to say that 'Black July' will not recur. There's nothing to say that it must. On the other hand, if it is not to happen again, it is important to remember what happened. It is important to acknowledge that it inflicted a deep wound on the nation, the people who make it, their collective and individual memory; a wound that has bled into many other lacerations. This has been a common view expressed by many across the political spectrum.

The President has in no uncertain terms said that no pains will be spared to make sure it won't happen again. The people have had to learn the hard way that allowing emotion to overcome reason does not alleviate fear and anxiety. They can unlearn fast, however. And this is why it is important to remember and to resolve to prevent repetition.

*The Nation*, while saluting the CPA and JWT for using the anniversary of this national tragedy to alert the public to the necessity to prevent such horrors from recurring, joins them in calling for remembrance, learning and the cultivating of resolve. To prevent.

ஜயவர்தன அரசாங்கம் மட்டுமல்ல. பேரினவாத ஆட்சியாளர்கள் அனைவருமே தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளுக்கும் அநியாயங்களுக்கும் பொறுப்பு கூறுவதற்கு ஒருபோதும் முன்வந்ததில்லை. காட்டுமிராண்டித் தனமாக வன்முறைகளில் ஈடுபட்ட குண்டர்களுக்கும் ஏனையோருக்கும் எதிராக எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மாறாக அவர்கள் அனைவருக்கும் தண்டனை விலக்கிட்டு அனுகூலத்தையே ஏற்படுத்தி இருக்கின்றனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் நியாயத்தையும் வழங்கவில்லை. பாதிப்புகளுக்கான இழப்பீடுகளை சட்டரீதியாகவோ அல்லது மனிதாபிமான ரீதியிலோ வழங்குவதற்கும் இதுவரையில் முன்வரவில்லை.

பேரினவாதிகளின் வன்முறை போக்கு கறுப்பு ஜுலையைப் போன்று வெளிப்படையான வன்முறைகளாக இல்லாமல் வேறுவேறு வடிவங்களில் இடம்பெறத் தொடங்கி இருப்பதையே இப்போது காண முடிகின்றது.

# வரலாற்றில் ஒரு நாள்

1975ம் ஆண்டு காலப் பகுதி அது. அப்போது யாழ் நகரத்தின் மேயராக இருந்த திரு. அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், எமது தேசியத் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரனை சிறிலங்கா காவற்துறையினர் தீவிரமாகத் தேடிக்கொண்டிருந்த காலம். தலைவர் அப்போது காங்கேசன்துறைப் பகுதியில் தலைமறைவாக இருந்தார். தலைமறைவு என்றால் எங்கோ பாதுகாப்பாக முடங்கியிருந்ததாக அர்த்தமில்லை. அடுத்தடுத்த நகர்வுகளை முன்னெடுப்பதற்காகவும் தொடர்பாடல்களுக்காகவும் அவர் எப்போதும் வெளியில் பயணிப்பது வழக்கம். தேவைப்படும் போதெல்லாம் அவர் பேருந்து பிரயாணங்களை மேற்கொள்வதே வழமை. தன்னை எவரும் கவனிக்காமல் இருப்பதற்காக அவர் வேட்டி கட்டுவதையும் கையில் ஒரு பத்திரிகையைக் கொண்டு செல்வதையும் புதிய வழமையாக்கியிருந்தார்.



குறிப்பிட்ட ஒரு பேருந்தில் அவர் பயணிப்பதை எதிரிகள் மோப்பம் பிடித்துவிட்டனர். அது மட்டுமல்லாது, அவர் வேட்டி கட்டுகிறார், கையில் பத்திரிகை வைத்திருப்பார், பேருந்தில் ஒரு குறிப்பிட்ட இருக்கையில் எப்போதும் அமர்ந்திருப்பார் என்ற தகவல்களும் அவர்களுக்கு கிடைத்திருந்தன. அன்றும் அப்படித்தான். ஒரு சாதாரண நாள். வழமைக்கு மாறாக எதுவும் இருக்கவில்லை. பயணத்தின் இடையில் பேருந்தினை வழிமறித்தனர் காவல்துறையினர். திபுதிபுவென உள்ளே நுழைந்த அவர்கள் ஒரு குறிக்கப்பட்ட இருக்கைக்குச் சென்றனர். அங்கு பத்திரிகையும் கையுமாக ஒருவர் உட்கார்ந்திருந்தார். வேட்டி அணிந்திருந்தார். அவரை காவல்துறையினர் கைது செய்தனர். அவர் ஒன்றும் புரியாமல் முழித்தார்.

இவையனைத்தையும் பேருந்தின் பின்னிருக்கையில் இருந்து ஒருவர் எந்தப் பதட்டமும் இல்லாமல் அவதானித்துக் கொண்டிருந்தார். அவரும் வேட்டி அணிந்திருந்தார். பத்திரிகை வைத்திருந்தார். சமயோசிதமாக சிந்தித்து பிரச்சனைகளிலிருந்து தப்புவது தலைவருக்கு பழக்கமான ஒன்றுதான். அன்று கைதாகியிருந்தால், அடுத்த முப்பத்து நான்கு வருடங்களுக்கு இந்த மாபெரும் விடுதலைப் போராட்டத்தை நடத்தியிருக்க முடியுமா?

# கறுப்பு சரித்திரம்

**தனித்துவம் அடையாளம் பண்புகள் மற்றும் வரலாற்றைக் கொண்ட பிறிதொரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களின் உரிமைகளைப் பறித்தும் அடையாளங்களைச் சிதைத்தும் அவ்வினத்தின் இருப்பை முற்றிலுமோ அல்லது பகுதியாகவோ அழித்து தன்னை மேனிலைப்படுத்துவதே ”இனப்படுகொலை”**

நவீன மயமாக்கப்பட்ட இவ்வுலகில், மனித நாகரிகங்கள், விழுமியங்கள், கலாச்சாரங்கள் மேம்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும் சக மனிதர்களின் இருப்பை அழிக்க முன்னெடுக்கப்படும் ”இனப்படுகொலைகள்” இன்று வரை தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. மனித குலம் மேம்பட்டுள்ளதாக சொல்லப்படும் இன்றைய பொழுதிலும், இனப்படுகொலைகள் வரலாற்றின் பக்கங்களில் தொடர்ச்சியாக எழுதப்பட்டபடியேதான் உள்ளன. இனப்படுகொலைகள் ஏன் முன்னெடுக்கப்படுகின்றன? யாரால் முன்னெடுக்கப்படுகின்றன? எப்படி முன்னெடுக்கப்படுகின்றன? போன்ற கேள்விகளின் பதில்கள் தேடலில் கிடைப்பவையே.

வரலாறு எனப்படுவது நிகழ்ந்து முடிந்த அல்லது நிகழ்த்தி முடிக்கப்பட்ட சம்பவங்களின் பதிவு. இவ்வாறான நிகழ்வுகளில் பிரச்சனையை அறியவும், தீர்வு காணவும், நிகழவிருக்கும் பிரச்சனையை எதிர்கொள்ளவும், வரலாற்றின் மீதான பார்வையும் தேடலும், ஆய்வுமே உறுதுணையாக நிற்கின்றன. கடந்த கால வரலாற்றை தேடல்களில் அறிவதன் மூலம், வருங்கால வரலாற்றை திறம்படவும் சிறப்பாகவும் உருவாக்க முடியும்.

இத்தகைய மகத்தான மனிதர்கள் திடீரென்று தோன்றி விடவில்லை.

மனித சமுதாயம் என்பது கூடி வாழ்வதும், கூட்டமாக இயங்குவதும் தான். ஒன்று பட்டு வாழ்வது தான் மனித சமுதாயத்தின் சாரம். எந்தவித வேறுபாடுகளும் இல்லாத ஆதி மனிதர்களுக்குள் எவ்வாறு அடிமைக்குணம் தோன்றியது? வேறுபாடு ஏன் வந்தது? எப்படி உருவானது? ஆம்! ஒரு இனம் அல்லது ஒரு தரப்பு தன் இருப்பின் தொடர்ச்சியை பேணவும் தனது பொருளாதார வளத்தைப் பெருக்கவும் முனைகின்றது. தனது வளத்தைப் பெருக்கவும், தடையின்றி முன்னேறிச் செல்லவும், தன்னிடமுள்ள அதிகாரங்களை விரிவாக்கி, அதிகாரத்தையும், படைபலத்தையும் பிரயோகித்து எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்க தயாராகின்றது.

தனித்துவம், அடையாளம், பண்புகள் மற்றும் வரலாற்றைக் கொண்ட பிறிதொரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி, அவர்களின் உரிமைகளைப் பறித்தும் அடையாளங்களைச் சிதைத்தும், அவ்வி

**வரலாறு எனப்படுவது நிகழ்ந்து முடிந்த அல்லது நிகழ்த்தி முடிக்கப்பட்ட சம்பவங்களின் பதிவு**

னத்தின் இருப்பை முற்றிலுமோ அல்லது பகுதியாகவோ அழித்து தன்னை மேனிலைப்படுத்துவதே "இனப்படுகொலை". ஆண்கள், பெண்கள், சிறார்கள், மற்றும் முதியவர்கள் என வேறுபாடின்றி திட்டமிட்டு சக மனிதனை தன் நலனுக்காக முற்றிலும் அழிக்கும் முதன்மை நோக்கமே இனப் படுகொலை ஆகும். இவ்வாறான இனப் படுகொலைகள் இன்று வரை மனித குல வரலாற்றின் பக்கங்களில் ஆணித்தரமாக எழுதப்பட்ட வண்ணமே உள்ளன.

இனப் படுகொலை என்பதை எழுத்தில் வரைந்தவர் போலந்து நாட்டின் யூத சட்ட வல்லுனர் ரபேல் லேம்கின் (Raphcal Lemkin) என்பவர். 1944 ம் ஆண்டு வெளியிடப்பட்ட "Axis Rule in occupied Europe " எனும் புத்தகத்தில் இனப் படுகொலை எனும் சொல்லைக் குறிப்பிட்டு அதை வரையறுத்திருக்கிறார். சர்வதேச தடைச் சட்டங்களின் படி இனப்படுகொலை என்பது தடைசெய்யப்பட்ட தண்டனைக்குரிய குற்றச்செயல் எனும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் 1948ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

உலக வரலாற்றில் பேசப்படும்
இனப் படுகொலைகளாக..

ஆர்மேனிய இனப்படுகொலை (1915 -1923),

யூத இனப்படுகொலை(1939-1945),

கம்போடிய இனப்படுகொலை(1975-1979),

ருவாண்டா இனப் படுகொலை(1994),

போஸ்னிய இனப்படுகொலை(1992-1995),

தர்/புர் - சூடான் இனப்படுகொலை

என நீண்டபடியே செல்லும் இனப் படுகொலைகளின் பட்டியலில் தமிழினப் படுகொலையும் அதிகம் பேசப்படும் ஒன்றாக இருக்கின்றது.














ஈழத் தமிழர் மீதான அடக்கு முறைகளையும் இனப்படுகொலைகளையும் ஓரிரு வரிகளில் விவரித்து விட முடியாது. இவ்வாறான இனப்படுகொலைகளில் பெரிதும் பேசப்படுவதும், பாரிய தாக்கங்களை ஈழமண்ணில் புதைத்ததும் இந்த கறுப்பு நிகழ்வுதான். 1983ம் ஆண்டு யூலை மாதம் இலங்கைத்தீவின் தெற்கில் நடந்தேறிய கறுப்பு யூலைக் கலவரம் ஈழத்தமிழர்களின் உள்ளங்களில் மாறாத வடுவாக, இன்றும் நினைவுகளில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டு தான் இருக்கின்றது. ஆண்டுகள் முப்பத்தியெட்டை தாண்டியும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களால் கறுப்பு யூலை மற்றும் 83 கலவரம் என்ற பெயர்களைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூரப்பட்டு வருகிறது.

1948ம் ஆண்டு பிரித்தானிய அரசிடம் ஆட்சிய திகாரத்தை பெற்ற சிங்கள அரசு அன்று முதல் இன்றுவரை இலங்கை தீவின் பல பகுதிகளிலும் மனித உரிமை மீறல்களைத் திட்டமிட்டு நிகழ்த்தி வருகின்றது. பிரித்தானியர் வெளியேறிய பின்னரும் தமிழர்கள் தனித்தும் வளங்கள் மிக்க இனமாக, தமது வாழ்வின் பயணத்தை இலங்கைத்தீவில் தொடர்ந்து கொண்டிருந்தனர். தமிழ் மக்களின் வளங்களை சூறையாடும் நோக்குடனும் தமது சொந்த நலன்களைப் பேணவும், இருப்பை தக்க வைத்துக் கொள்ளவும் பெரும்பான்மையினரான சிங்களவர் திட்டமிட்டு தமிழர்களின் உரிமைகள், அதிகாரங்கள், அடையாளங்கள் மற்றும் பொருளாதாரம் என அனைத்தையும் இலக்கு வைத்து அழிக்கும் செயற்பாடுகளை கட்டவிழ்த்து விட்டிருந்தனர். அவை பாரிய இனவழிப்புத் திட்டமாக உருப்பெற்று 1983ம் ஆண்டு யூலைமாதம் இனக்கலவரம் அரங்கேற்றப்பட்டது.

யூலை மாதம் 24ம் திகதி தொடங்கிய இனவழிப்புச் சம்பவம் சுமார் இரண்டு வாரங்களுக்குத் தொடர்ந்தது. சிங்கள இனவாதிகள் இலங்கை தென்பகுதி தமிழ்மக்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொண்டிருந்தனர். தமிழர்களின் வளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. தமிழர்களின் வாழ்வுரிமை முற்றிலும் பறிக்கப்பட்டது. பொருளாதாரம் முழுவதும் சூறையாடப்பட்டது. சிறார்கள், இளையோர், மற்றும் வயது முதிர்ந்தோர் என வயது வரம்பற்று, வெட்டப்பட்டும், உயிரோடு எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர். நீரிலிருந்து தூக்கி வீசப்பட்ட மீன்கள் போல வீதி எங்கும் துடி துடித்து மாண்டனர் தமிழர்கள். பெண்களை தெய்வத்திற்கு நிகராக போற்றுவது தமிழர் பண்பாடு. இயற்கையிடம் இல்லாத தாய்மைக் குணம் பெண்ணிடமே இருப்பதாக கொண்டாடுகின்றோம். தண்ணீருக்கும், பூமிக்கும் பெண்மைத் தன்மை தந்து வணங்கும்



இந்த பாரினிலே, தமிழ்ப் பெண்களாகவிருக்கும் ஒரே காரணத்திற்காக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர் எமது பெண்கள்.

சிங்கள இனவாதிகளால் அன்று தீயில் கொழுந்து விட்டு எரிந்தது தமிழரின் உயிர்களும், உடமைகளும் மட்டுமல்ல, தீயில் அன்று கருகியது புத்தரின் போதனைகளும் தான். தமிழினப் படுகொலையின் உச்சமான இச்சம்பவத்தில் சிங்கள இனவாதிகளால் ஆயிரக் கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஐநூறுக்கும் அதிகமான பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று அன்றைய பத்திரிகைக் குறிப்புகள் தெரிவித்தன. ஆனால், 3000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்டனர் என்றும் பல நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் சிங்களக் காடையர்களால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள் என்றும் அன்றைய 'த ரைம்ஸ்' பத்திரிகை செய்தி தெரிவிக்கின்றது. இதன் விளைவாக ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் தம் உயிர் காக்க, தாய் நாட்டை விட்டு புலம் பெயர் நாடுகளில் தஞ்சமடைய நேர்ந்தது.

1983 யூலை 23 அன்று இனவழிப்பு நோக்குடன் இலங்கை இராணுவத்தினரை ஏற்றியவாறு இராணுவ வாகன அணியொன்று பலாலியில் இருந்து புறப்பட்டு

யாழ் நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது. அதை இடைமறித்த விடுதலைப் புலிகள் யாழ் திரு-நெல்வேலிப் பகுதியில் வைத்து இராணுவத்தின் மீது தாக்குதல் நடாத்தினர். இத் தாக்குதலில் பதின் மூன்று(13) இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருந் தனர். இந்தச் சம்பவம் இலங்கை இராணுவத்திற்கு பெரும் அதிர்ச்சியையும், தாக்கத்தையும் ஏற்படு-த்தியிருந்தது.

இத் தாக்குதலே இனக்கலவரத்திற்கு அடித்தளம் என்ற தவறான கண்ணோட்டம் இன்று வரை உள்ளது. உண்மையில் அன்று நடந்தேறியது திட்டமிட்டு, வேண்டுமென்றே செயல்படுத்தப்பட்ட ஒரு இனப் படுகொலையாகும். அதற்கு அன்றோ, இன்றோ, தனிநபரோ, அரசோ இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆடிக் கலவரத்தைப் பற்றி அன்றைய அதி-பர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனே பின்வருமாறு கூறினார் :

"யாழ்ப்பாண தமிழ் மக்கள் என்ன நினைக்கி றார்கள் என்பதைப்பற்றி நான் கவலைப்படவி ல்லை. இப்போது நாங்கள் யாழ்ப்பாண மக்களை எண்ணிப் பார்க்க முடியாது. பயங்கரவாதிகளை ஒழிக்கும் வரை எங்களுக்கு நல்லது நடக்கப் போவதில்லை. ஒரு நோயாளிக்கு குறிப்பிட்ட குடற் பகுதியை முற்றாக அகற்றினால் தான் குடல் அழற் சியின் பாதிப்பிலிருந்து குணமடைய முடியும்".

அவர் தமிழ் மக்களின் உயிர்களை துச்சமாக எண்ணி இந்த விடயத்தைக் கூறினார் என்பது குறிப் பிடத்தக்கது. அரசியல் கைதிகளான குட்டிமணி மற்றும் ஜெகன் ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அவர்களது கடைசி ஆசையாக தமது கண்களை கண்பார்வையற்ற தமிழருக்கு தானமாக வழங்கி அதன் மூலம் விடியும் தமிழீழத்தை தமது விழிகள் காண எண்ணி நீதி-பதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் 1983 யூலை அதே நாளில் சிறையில் குட்டிமணி யின் கண்கள் தோண்டியெடுக்கப்பட்டு புத்தரின் முன் வீசப்பட்டது என்பது நெஞ்சை பிழியும் ஒரு விடயமாகவே தமிழர்களின் உள்ளங்களில் என்றும் உள்ளன. இவ்வாறான படுகொலைகளுக்கு நீதி கிடைக்குமென தமிழ்மக்கள் நம்பி இன்று வரை ஏமாற்றமே அடைந்தனர். எப்போதுமே தமிழ் மக்களின் படுகொலைக்கான நீதிக்கதவுகள் மூடப்பட்டே உள்ளன.

கறுப்பு யூலை வன்முறையானது கொழும்பில் மட்டுமே நிகழ்ந்தது என்று பலர் நம்புகின்றனர். இது உண்மையான விடயமல்ல. தென்னிலங்கையின் பிற நகரங்களிலும் தமிழருக்கு எதிரான வன்முறை கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அன்று, தமிழர் வாழ்ந்த இடமெங்கிலும் கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. கலவரம் என்ற பெயரில் கொள்ளைய-டித்துச் சென்றது காடையர் கூட்டம். குருதியில் நனை ந்த தமிழ் மண்ணை அன்றும் ஏக்கத்துடனேயே பார்த்தோம். ஏனெனில் இழந்ததன் மீது எப்போதும் மனிதனுக்கு ஒரு ஏக்கம் உண்டு. இழந்ததை நாம் மறந்து விடாமல் உரம் போல மனதில் புதைத்து விட்டு புதிதாக ஒரு சரித்திரம் படைக்க, இந்த கறுப்புச் சரித்திரத்தை நினைவுகூருவோம்.

மறப்பது மனித இயல்பு...... அதை நினைவுபடு-த்துவதே விடுதலை வேண்டுவோரின் கடமை. எந்த வொரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் இருக்கும் என்பதற்கிணங்க கறுப்புயூலை கலவரமானது தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடை யவும் வலுப்பெறவும் முக்கிய காரணமாக அமைந் துவிட்டது. வானை முட்டிய மரண ஓலத்தையும், வீதியெங்கும் ஓடிய குருதி ஓடையையும் பார்த்து பரிதவித்து நின்ற மக்களின் மனங்களில் அடக்கு-முறைக்கு எதிரான கிளர்ச்சியையும், மாற்றத்தை யும் ஏற்படுத்தவும், தம்மீதான அடக்குமுறைக்கு எதிராக ஒன்றிணைந்து தமது உரிமைகளை வென் றெடுக்க தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இணை ந்து கொள்ளவும் இக்கலவரம் முக்கிய காரணமாக அமைந்தது.

**அன்று குருதிபடிந்த வாயுடன்**
**வேட்டையில் திருப்தியுற்ற சிங்கம்.**
**அக்கினிக்கு இரையாகி**
**அகத்தில் அக்கினியாய் இன்று**
**உறவுகளின் உயிர்த்தியாகம்**
**உணர்வுகளாய்.**
**பேனாவில் மையாய்**
**பூவைத்தாங்கும் காம்பைப் போல**
**உங்கள் நினைவுகளை**
**தாங்கி நிற்கிறோம்.**
**முப்பத்தியெட்டுஆண்டுகள் கழிந்தாலும்**
**வலிகள் ஏனோ குறையப் போவதில்லை.**
**வலியது நிறைந்து**
**உளமது உருப்பெற்று**
**காத்துக் கிடக்கிறது**
**நாளைய விடியலை நோக்கி......**

**- வானிலா -**

# மறைந்தும் மறையாத வரலாற்றுக் காவியம் "ஈழத்துக் கோற்றவை"

- நிலாதமிழ் -

ஈழத்துக் கொற்றவைகள் தெய்வங்களாகப் போற்றப்பட வேண்டியவர்கள். இவர்களுக்கு துயிலுமில்லங்களில் நினைவுக் கற்களோ கல்லறைகளோ இருக்காது. இவர்கள் வீரச்சாவடைந்தால் நினைவுநாட்களில் பெயர்களோ அடையாளங்களோ தகவல்களோ வெளிப்படுத்தப்படமாட்டாது. எப்போதாவது எதிரி தன் விசாரணையில் சம்பந்தப்பட்டவரின் அடையாளங்களை உறுதிப்படுத்தினாலொழிய இவர்கள் பற்றிய தரவுகள் எந்தக் காலத்திலும் வெளிவராது. ஊறறியாமல் உறங்கும் உண்மைகள் இவர்கள். ஊமையாய் இருந்து ஒரு பெரும் சரித்திரத்தைப் படைத்துவிட்டுச் செல்வார்கள். கல்லாகிக் கிடக்கும் கடவுளர்களை மறந்துவிட்டு கல்லறை கூட இல்லாத எம்மின கொற்றவை தெய்வங்களை வணங்குவதே என்றும் போற்றுதற்குரியது.

அவ்வாறாகப் போற்றப்பட வேண்டிய ஈழத்துக் கொற்றவைத் தெய்வங்களில் ஒருத்திதான் "சாதனா". பெயருக்கேற்ற வகையில் மாபெரும் வரலாற்றுச் சாதனை படைத்து வரலாறாகிப் போவாள் என்று அவளின் பெற்றோர்கள் அன்று அவளுக்குப் பெயர் சூட்டும்போது நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள்.

தமிழர் தலைநகரான திருகோணமலையில் தான் இவள் வீரப்பிறப்பெடுத்தாள். சாதனாவின் தந்தையார் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தாயார் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவளது இரண்டு வயது வரைக்குமான வாழ்க்கைப் பராயம் திருகோணமலையில் தான் இனிதே கழிந்தது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் வன்கவரப்பட்டுக் கொண்டிருந்த இவளது தந்தையின் சொந்த ஊரிலே தான் இவளது



குழந்தைப் பருவத்தின் முதலிரண்டு ஆண்டுகள் கழிந்தன. இவளது குடும்பத்தினர் ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக உதவிச் செயற்பாடுகளில் ஈடுபட்டதால் சிங்கள இராணுவப் புலனாய்வாளர்கள், காடையர்கள், இராணுவத்தினரின் கொடும் கெடுபிடிகளுக்கு ஆளானார்கள். இதனால் இவர்கள் அங்கு தொடர்ந்து வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் சாதனாவின் தாயாரின் பிறப்பிடமான முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து சென்று குடியேறினார்கள். அங்கு பெயர் சொல்லக்கூடிய மிகவும் செல்வாக்கான வசதிமிக்க குடும்பத்தினைச் சேர்ந்தவர்கள் தான் அவளின் தாயின் குடும்பத்தினர். பல ஏக்கர் கணக்கான விளைநிலங்களும் மாட்டுப் பண்ணையுமென செல்வம் படைத்த, பாரம்பரியமிக்க விவசாயக் குடும்பத்தினராகவும் அவ்வூரிலேயுள்ள ஏழை எளியவர்கள் இல்லை என்று வந்து நிற்கும் போது அள்ளிக் கொடுப்பவர்களாகவும் இவர்கள் விளங்கினார்கள்.

சாதனா சிறுவயதிலிருந்தே மற்றச் சாதாரண குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வேறு பட்ட சிந்தனையுடைய ஒரு அசாதாரண குழந்தையாகவே காணப்பட்டாள். வீட்டிலே அதிகாலையிலே எழும்பி தாயாருக்கு உதவியாகப் பால் கறப்பது, தந்தையாருக்கு உதவியாக வயல் வேலைகளுக்குச் செல்வது, அவ்வேலைகளை முடித்துவிட்டு வந்து பாடசாலை செல்வது என்று வீட்டிலே பொறுப்புமிக்க மனமுதிர்ச்சி கொண்ட ஒரு குழந்தையாகவே வளர்ந்து வந்தாள். முல்லைத் தீவு மாவட்டத்திலேயுள்ள மிகவும் பிரபல்யமான ஒரு பாடசாலையிலேயே சாதனா தனது கல்வியினை சிறுவயது முதல் கற்று வந்தாள். கல்வி, விளையாட்டு, ஓவியம் வரைதல், சிறுகதைகள், கவிதைகள் எழுதுதல் போன்ற பல்துறைகளிலும் ஆற்றல்மிக்கவளாக விளங்கியதோடு மட்டுமன்றி ஆசிரியரை மதித்து நடத்தல், சகமாணவரை அனுசரித்துப் போதல், அவர்களுக்கு ஏதாவது கஷ்டங்கள், பிரச்சனைகள் ஏற்படும்போது முதல் ஆளாக நின்று உதவி செய்தல் போன்ற காரணங்களினால் கல்லூரியிலேயே அனைவராலும் விரும்பப்படும் ஒரு மாணவியாகத் திகழ்ந்தாள்.

பொதுவாகவே அவளிடம் மக்களுக்கு சேவை செய்யும் மனப்பாங்கு காணப்பட்டது. அதாவது வயது முதிர்ந்தவர்களைக் கண்டால் ஓடிப்போய் உதவி செய்தல், உணவின்றி கஷ்டப்படுபவர்களுக்கு தனது வீட்டிலிருந்து உணவு எடுத்துக் கொண்டு சென்று கொடுத்து உதவுதல் போன்ற இரக்கமான மனப்பாங்கு கொண்டவளாகக் காணப்பட்டாள். இந்திய இராணுவத்தினரால் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள், உயிர்க்கொலைகள், மற்றும் சிறீலங்கா இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட எறிகணை வீச்சுகள், விமானக்குண்டு வீச்சுகளால் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டமை போன்ற காரணங்களினால் உளத்தாக்கமடைந்து "கடவுள் என்ற ஒருவர் இருக்கிறாரா...? அவர் இருக்கிறார் என்றால் இவ்வளவு அநியாயங்களையும் பார்த்துக் கொண்டு சும்மா தானே இருக்கிறார்" என்று அடிக்கடி சொல்லிக் கவலைப்படுவாள்.

இதன் காரணத்தினால் தாயார் கோவிலுக்குச் சென்றுவரக் கூப்பிட்டால் "இராணுவம் இத்தனை அப்பாவி மக்களைக் கொல்லும் போது உந்தக் கடவுள் சும்மா தானே பார்த்துக் கொண்டிருந்தவர்.... அதனைவிட தன்னின மக்கள் கொல்லப்படுவதைப் பார்த்து பொறுக்க முடியாமல் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து தன் மண்ணிற்காக மக்களிற்காக தம்முயிரை ஈந்த மாவீரர்களைக் கும்பிடலாம்" என்று மறுத்துக் கூறி இறைவழிபாட்டை வெறுத்து மாவீரர் துயிலுமில்லங்களுக்கே சென்று கல்லறைகளுக்கு மலர் வைத்து வழிபடுவாள்.

பாடசாலைகளில் தமிழீழ மாணவர் அமைப்பினால் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்படும் முதலுதவி வகுப்புகள் மற்றும் சிரமதானப்பணிகள் போன்றவற்றிலும் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வந்தாள். இச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் போதுதான் சாதனாவுக்கும் போராளிகளுக்கும் இடையிலான உறவு ஆரம்பித்தது. போராளிகளின் தன்னலமற்ற உதவிபுரியும் மனப்பாங்கு, அவர்கள் மக்கள் மீது வைத்திருக்கும் தூய்மையான அன்பு, நீதி, நேர்மை, தனிமனித ஒழுக்கம், கட்டுப்பாடுகள் போன்றனவற்றின்பால் ஈர்க்கப்பட்டு தானும் ஒரு போராளியாக வேண்டும் என்ற விருப்பு அவள் மனதில் ஏற்பட்டது.

அதன் காரணத்தினால் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைவதற்காகச் சென்றாள். அவளது வயதினையும் கற்றலின் முக்கியத்துவத்தினையும் கருத்தில்கொண்டு விடுதலைப்புலிகள் அமைப்பு க.பொ.த சாதாரணம் படித்து முடித்துவிட்டு வரும்படி திருப்பி அனுப்பியது.

சாதனாவும் பயின்று பொதுத்தேர்வில் தோற்றுகின்றாள். க.பொ.த சாதாரண பரீட்சை தேர்வு முடிவுகள் வெளிவருகின்றது. பாடசாலையிலேயே அதிகூடிய பெறுபேறுகள் பெற்றவர்களின் பட்டியலில் அவளின் பெயரும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. பின்னாளில் அடிப்படைப் பயிற்சி முகாமில் அடிப்படைப்பயிற்சிகளை மேற்கொண்டு புடம் போடப்பட்டு ஒரு உறுதியான போராளியாக உருவாக்கப்படுகிறாள். எந்தக் கடின பயிற்சிகளிலும் பின்வாங்காத உறுதி, இராணுவக் கல்விக் கற்கைநெறிகளை மிகுந்த ஈடுபாட்டுடன் உள்வாங்கும் விதம், சகிப்புத்தன்மை, இரகசியம் காத்தல் போன்ற ஒவ்வொரு திறமைகளும் அடிப்படைப் பயிற்சிமுகாமில் அவதானிக்கப்பட்டு பயிற்சிகள் நிறைவடைந்தவுடன் புலனாய்வுத்துறை க்குள் உள்வாங்கப்படுகின்றாள்.

அங்கு மறைமுகக் கரும்புலிகள் தொடர்பான நிருவாகப்பணிகளை மேற்கொள்ளும் போராளி ஒருவருக்கு உதவியாளராக சாதனா செயற்படுகின்றாள். முகாமில் மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவளாகவும் அறிவுத்தனமான உரையாடல்களில் மட்டுமே பங்கு கொள்பவளாகவும் தனது குடும்பம், அன்பு, பாசப்பிணைப்புகள் பற்றி எவரிடமும் கதைக்காத தன்மை கொண்டவளாகவும் தேசியத்தலைவர் சிந்திப்பது போலவே ஒவ்வொரு விடயத்தையும் ஆராய்ந்து நிதானமாக சிந்தித்து தெளிவான முடிவு எடுப்பவளாகவும் ஒரு மனமுதிர்ச்சியடைந்த போராளியாக அவள் காணப்பட்டாள்.

அவளிடம் ஓவியம் வரைதல், உருவப்பொம் மைகள் செய்தல் போன்ற தனித்திறமைகளும் காணப்பட்டன. தான் ஓய்வாக இருக்கும் போது எமது மக்களின் இன்னல்கள் போராட்டங்களைச் சித்தரிக்கும் ஓவியங்கள் வரைவாள். உபயோகி த்து முடித்த பிளாஸ்ரிக்காலான வெற்று பொன்ட்ஸ் பவுடர் (Ponds powder) போத்தல்களை பிளேட்டி னால் (blade) வெட்டி பெண் முதல் மாவீர வித்தான 2ம் லெப்ரினன்ட் மாலதி, தியாகச் செம்மல் லெப். கேணல் திலீபன், கரும்புலி மாவீரரான கப்டன் மில்லர் போன்றவர்களின் உருவங்களை மிக அழ காகச் செதுக்கி உருவப்பொம்மைகளாக்கி தனது பணியிடம் முழுவதும் ஓவியங்களாலும் உருவப்பொ ம்மைகளாலும் அலங்கரித்து வைத்து அவர்களின் நினைவிலேயே தானும் மனதில் உறுதியேற்றியபடி வாழ்ந்திருந்தாள். அதைவிட சிறுகதைகள், கவி தைகளாலும் தனது நாளாந்தக் குறிப்பேடுகளை நிரப்பி வைத்திருந்தாள்.

அங்கே பணிமுடித்து ஓய்வான நேரங்களில் சாதனா உலக புலனாய்வு அமைப்புகள் தொடர்பான நூல்களை விரும்பி வாசிக்கின்றாள். மேலும் அவ்வமைப்புகள் தொடர்பான மேலதிக தகவல்கள், கேள் விகள், சந்தேகங்களை மிகவும் ஈடுபாட்டுடன் தனது பொறுப்பாளரிடம் துருவித் துருவிக் கேட்டுத் தெளிந்து கொள்கின்றாள். இதன் காரணத்தினால் அவளுக்கு மறைமுகக் கரும்புலிகள் அணியில் தானும் சேரவேண்டும் என்ற ஈடுபாடு வருகின்றது. அதனைத் தனது பொறுப்பாளரிடம் தெரிவிக்கி ன்றாள். இது தொடர்பில் அவளது தேடல், அதீத ஈடுபாட்டினைக் கண்ட பொறுப்பாளரும் துறைசார் முதன்மைப் பொறுப்பாளருக்கு அதனைத் தெரிவிக்கின்றார். அவரும் அவளை ஒருமுறை நேரில் சந்தித்துக் கதைத்துப் பார்த்து அவளது சுயதேடல், மனவுறுதி, விடுதலைப் போராட்டத்தின் மீதும் மக்கள் மீதும் கொண்டிருந்த பற்று என்பனவற்றை இனங்கண்டு மறைமுகக் கரும்புலிகள் அணிக்குள் உள்வாங்கப்பட அனுமதியளிக்கின்றார்.

பின்பு சாதனா மறைமுகக் கரும்புலிகள் அணி யின் சிறப்புப் பயிற்சிகள், கற்கைநெறிகளுக்குள்



உள்வாங்கப்படுகின்றாள். அங்கு இரகசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது ஒருவர் பற்றி இன்னொருவருக்கு தெரியக்கூடாது என்ற காரணத்தினால் வழங்கப்படும் தனிக் கொட்டில் வாழ்வு, உருமறைப்பிற்கான மூடிய ஆடைகள் எனச் சென்ற அந்தப் பயிற்சிக் காலம் என்பது அவளுக்குள் தன்னை மறைத்து, தன்னை ஒறுத்து, தமிழீழ விடுதலைக்காய் வெளியே தெரியாத வெளிச்சமாகிப் போகும் வாழ்விற்கு அவளை அணியப்படுத்தியது.

மறைமுகக் கரும்புலிகள் அணியில் சாதனாவின் பயிற்சிகள் நிறைவுற்றதும் மொழிகள் (ஆங்கில மொழி, சிங்களமொழி) தொடர்பான அறிவு பெறு வதற்கு அனுப்பப்படுகின்றாள். அங்கு சிங்கள மொழி கற்பிப்பதற்கு ஆசிரியரை ஒழுங்குபடுத்து வதற்கு ஒரு மாதம் தாமதமாகின்றது. அந்தக் காலத்தை வீணடிக்காது, ஒரு மாதத்திலேயே சிங்களமொழி நூல்களை படிப்பகத்திலிருந்து பெற்று சுயமாகவே கற்றுத் தேர்ச்சியடைகின்றாள். பின்பு சிங்களமொழி ஆசிரியரால் மொழி கற்பிக்கப்படும்போது ஏற்கனவே சிங்களமொழி நன்றாகக் கற்றுத் தேர்ந்த ஒருவரைப்போல அவளது மொழி தொடர்பான அதீத திறமையைக் கண்டு அவர் திகைப்படைகின்றார். இப்படியாக எதனையும் சுயமாகவே முயன்று கற்றுக் கொள்ளும் ஆற்றல் அவளிடம் காணப்பட்டது.

பின்பு அவளுக்குரிய இலக்கு வழங்கப்பட்டு வெளி நடவடிக்கை ஒன்றிற்காக சிங்களமொழி பேசும் ஒரு இடத்திற்கு அனுப்பப்படுகின்றாள். அங்கே அவள் மறைப்பில் இருந்தகாலத்தில் தொழில்நுட்பக் கல் லூரியொன்றில் கல்விகற்று சான்றிதழும் பெற்றுக் கொள்கின்றாள். மக்களோடு மக்களாக எதிரிக்கு சந்தேகம் வராத மாதிரி சாதாரண வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டு தனது இலக்கிற்குத் தேவை யான தகவல்களையும் பெற்றுக் கொள்கின்றாள்.

க.பொ.த சாதாரணதர சிறந்த பெறுபேறு, தொழில் நுட்பக்கல்லூரியில் கிடைக்கப் பெற்ற தகைமைச் சான்றிதழ் என்பனவற்றைக் கொண்டு கொழும் பில் மிகப்பிரபல்யமான மேல்தட்டுவர்க்கத்தினரின் பிள்ளைகள் கல்வி கற்கும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் இணைந்து கல்வியைத் தொடர்ந்து கொண்டு இலக்கினை நோக்கி அணியப்படுத்திக் கொள்ளுமாறு அவளை அவளின் பொறுப்பாளர் பணிக்கிறார். அவளும் அவ்வாறே செய்கிறாள்.

சாதனாவின் ஆங்கில மொழிப் புலமை, சிங்கள மொழிப் புலமை, அமைதியுடன் கூடிய அழகிய தோற்றம் போன்றவற்றினால் அவளில் எவருக்கும் சந்தேகம் ஏற்படவில்லை. அங்கே கற்கைநெறி யினை மேற்கொள்ளும்போது சாதனாவுக்கு நிறைய

மேல்தட்டுவர்க்க சிங்கள நட்புகள் கிடைக்கின்றன. எவருமே போகமுடியாத முக்கிய நகரப் பகுதிகளில் உள்ள பல சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்லும் இடங்களான விளையாட்டரங்குகள் போன்ற இடங்களுக்கு தனது சிங்கள நண்பர்க-ளுடன் சென்று தனது இலக்கிற்கான தகவல்களை மிகவும் திறமையாகச் சேகரிக்கின்றாள். பாதுகா ப்புக் காரணங்களினால் வெளிநாடு ஒன்றிலிருந்து மிகச் சுருக்கமாகப் பரிமாறப்படும் தகவல்களின் மூலமாக மட்டும் தன்னுடைய பொறுப்பாளருடனும் துறைசார் பொறுப்பாளருடனும் தொடர்பினைப் பேணியவாறு தனது இலக்கினை நோக்கிச் செய-ற்பட்டு வந்தாள். அவளுக்கு வழங்கப்பட்ட இலக்கி ற்கான தகவல்கள் வாய்ப்புகள் மட்டுமல்லாது வேறு இலக்குகளுக்கான தகவல்கள் வாய்ப்புகளும் வெற் றியளித்த பல நடவடிக்கைகளுக்கான தகவல்கள் வாய்ப்புகளும் சாதனாவின் அதீத திறமையினால் அவள் சார்ந்த துறை மேலாளருக்கு அவளால் வழ ங்கப்பட்டன.

இந்தப் பணிகளை மேற்கொள்ளும்போது சாதனா வெறும் 20 அகவையினையே அடைந்திருந்தாள். அவள் கல்வி கற்குமிடத்தில் அவளுடன் கூடப் படி-க்கும் வகுப்புத் தோழன் ஒருவன் இவளது அழகு, உதவும் மனப்பாங்கு, கற்றலில் உள்ள திறமை இவற்றைக்கண்டு சாதனாவின் மேல் காதல் வயப்படுகின்றான். அவள் அதனை முதிர்ச்சியுடன் கையாண்டு அவனைத் தனது இனிய நண்பனா கவும் சகோதரனாகவும் ஏற்றுப் பழகிக்கொண்டு அவனின் உதவியாலும், அவனின் அறிவுக்கு எட் டாத வகையிலும், சந்தேகம்வராத வகையிலும் தனது இலக்கிற்கு தேவையான தகவல்களைச் சேகரித்துக் கொள்கின்றாள். பருவகால இளவயது, மனதை மாற்றக் கூடிய சூழல்கள், காதல் போன்றவ-ற்றினைச் சந்தித்த போதும் தனது கொள்கையில் இருந்து சிறிதும் வழுவாது, சிறப்புப் பயிற்சிகளின் முடிவில் அவள் உறுதிமொழியேற்கும் போதிருந்த அதே உறுதியுடன் மிகத்தெளிவாக தனது சரியான இலக்கை நோக்கி செயற்பட்டுக்கொண்டிருந்தாள்.

சிங்களமொழி பேசும் இடங்களில் வசித்ததால் சாதனாவிடம் சிங்கள நாளிதழ்கள் வாசிக்கும் பழக்கம் காணப்பட்டது. அப்போது தான் சிங்கள மக்கள் அப்பாவிகள் இல்லை என்பதும் அவர்கள் தமிழ்மக்களுக்கெதிராக கடும் மனவெழுச்சி கொண் டிருந்ததும் கருத்தியல் ரீதியாக அவளுக்குப் புரி ந்தது. மற்றும் வன்னியில் சிங்கள இராணுவத்தி-னரின் ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதல்களால் தனது மக்களும் போராளிகளும் கொல்லப்படுவ தைக் கண்டு அவளது உள்ளம் உலைக்களமாகக் கொதித்தது. அவர்களுக்கு தகுந்த பாடம் கற்பி



க்கப்பட வேண்டும் என்ற வெறி அவளது உள்ளத் திலே ஆழ வேரூன்றியது. அதற்குச் சரியான வழி சிங்கள இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணி யின் பயிற்சி முகாமிலேயே வைத்து அவர்களை அழிப்பது என்று உணர்ந்து அந்த இலக்குத் தொட ர்பான தகவல்களையும் தானே முன்னின்று சேக ரித்துத் தலைமைக்கு கொடுத்து அது தொடர்பான வெற்றித் தாக்குதல்களுக்கும் வழியமைத்துக் கொடுத்தாள்.

அவளுடன் ஒன்றாகப் படித்த மேல்தட்டுவர்க்க சிங்கள நண்பி ஒருவரின் விருந்துபசார விழா ஒன்றிற்கு சென்றபோது அங்கே ஒரு இராணுவ அதி காரியை அவள் தற்செயலாகக் காணக் கிடை-த்தது. தென்தமிழீழத்தில் படுகொ லைகளை முன்னின்று நடாத்தி எமது மக்களை நேரில் நின்று கொன்றுகுவித்த சிங்கள இராணுவ அதிகாரி தான் அவன் என தான் முன்னர் வாசித்துத் துன்பப்பட்ட தென்தமிழீழப் படுகொலைகள் தொடர்பான குறி-ப்புகளை மீள்நினைவூட்டி உறுதிப்படுத்திக்கொ ண்டாள். அவனைப் பற்றிய நெருக்கமான தகவல்-களைத் திரட்டியதோடு அவனை அணுகக் கூடிய வாய்ப்பும் அவளுக்குத் தற்செயலாகக் கிடை-த்தது. அவளது மனதில் ஈவிரக்கமற்றுப் பொது மக்களைக் கொன்று குவித்த அந்த இராணுவ அதிகாரியை அழிக்க வேண்டும் என்ற வன்மம் உருவாகுகின்றது. அந்த இராணுவ அதிகாரியை தானே சுட்டுக் கொல்ல தலைமையிடம் அனுமதி கோருகின்றாள். ஆனால் தலைமை அவளுக்கு வழங்கப்பட்ட இலக்கு வேறு என்பதால் இந்த நடவ-டிக்கையை மேற்கொண்டால் அது பாதிக்கப்படும் என்று விளக்கங்கூறி அதற்கான அனுமதி அவளு-க்கு மறுக்கப்படுகின்றது. ஆனால் சாதனா தனது இலக்கினைப் பாதிக்காத வகையில் இந்த நடவடி-க்கையை மேற்கொள்கிறேன் என்று உறுதியளித்து அனுமதி வாங்கி அதற்கான ஆயுதத்தினை வாங்கி பாதுகாப்பாக வைத்துக் கொண்டு அந்த இராணுவ அதிகாரி தொடர்பான தகவல்களைச் சேகரிக்கி ன்றாள். அவனது நாளாந்த நடவடிக்கைகள், பொழுது போக்குகள் என்பவற்றினை அவதானித்து

தெளிவான இலக்கிற்காக காத்திருக்கின்றாள். ஒருநாள் அந்த அதிகாரி தனது வீட்டிற்கு பக்கத்தில் இருக்கும் நாளிதழ் கடையில் நாளிதழ் வாங்கிக் கொண்டு திரும்பி வரும்போது அவரைச் சுட்டுக் கொல்லக்கூடிய தெளிவான இலக்கு அமைகின்றது. மிகத் திறமையாக இலக்குப் பிசகாது அந்த இராணுவ அதிகாரியை சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பியோடுகின்றாள். அன்று அந்தத் தாக்குதல் வெற்றிகரமாக அமைந்தது அவளுக்கு மிக்க மகிழ்வாக இருந்தது.

அந்தக் கொலைக்கான சூத்திரதாரியை சிறிலங்கா இராணுவப் புலனாய்வாளர்கள் மூலை முடுக்கெல்லாம் தேடித் திரிந்தார்கள். அவர்களால் அவளைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாதிருந்தது. அவளின் பாதுகாப்பு கருதியும் அவளைப் போன்ற திறமையுடைய அனுபவமுடைய போராளியால் மட்டுமே இன்னும் பல போராளிகளை உருவாக்கலாம் என்பதைக் கருதியும் இந்தத் தாக்குதல் வெற்றியடைந்ததே போதும் அவளது இலக்கை வேறொரு மறைமுகக் கரும்புலியிடம் கையளிக்கலாம் என்று கருதியும் சாதனாவைத் திரும்பி வன்னிக்கு வருமாறு தலைமையிடமிருந்து பணிப்பு வந்தது. ஆனால் அவளோ தனது இலக்கை அடையாமல் திரும்பி வரமாட்டேன் என்று தனது இலக்கிற்காகக் காத்திருந்தாள். கடைசியில் அவளது உறுதியின் முன்னால் தலைமையால் ஒன்றும் செய்ய முடியாமல் அவளது இலக்கை அவள் தொடர்ந்து மேற்கொள்ள அனுமதியளித்தது. அவள் காத்திருந்த இலக்கும் ஓர்நாள் வந்தது. வெகுமகிழ்வுடன் அதற்குரிய ஆயத்தங்களுடன் இலக்கை நோக்கிச் செல்கின்றாள். ஆனால் அவளால் அதனை நெருங்க முடியவில்லை. திரும்பியும் செல்ல முடியாத நிலையில் தன்னையே உயிராயுதமாக்கி வெடிக்க வைத்து வீரச்சாவைத் தழுவி வீரவரலாறாகின்றாள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து மிகக் குறுகிய காலத்தில் எவருமே செய்ய முடியாத சாதனை படைத்து வரலாறான சாதனாவின் வரலாற்றைப் படிக்கும் ஏனைய போராளிகள் இன்னும் புடம் போடப்பட்டு உத்வேகத்துடன் உருவாகுவார்கள். சாதனா மறைந்தும் மறையாத வரலாற்றுக் காவியமான புலனாய்வுப் போராளியாக என்றும் எல்லோரின் மனங்களிலும் வாழுகின்றாள்.



"உயிர் மின்னல் கீறும்
ஒரு ஓவியம்...
அது வரைகின்ற நேரம்
பெரும் காவியம்...

திரை மூடி வாழும்
ஒரு ஜீவிதம்...
வெளி தெரியாமல் ஆடும்
உயிர் நாடகம்...

புரியாத புதிராக
ஒரு தென்றல் போகும்...
புயலாகும் நேரத்தில்
இடியாக மாறும்...


அழியாத கதையாகி
வரலாறு மீளும்...
அவர் நாமம் ஒரு காலம்
தமிழீழம் பேசும்!"

யாவும் கற்பனை அல்ல...

**இறந்தவர்களுக்காக அழுதவர்கள் மத்தியில்**

**அழுதவர்க்காக இறக்கத் துணிந்தவர்கள்**

**கரும்புலிகள்**



# கரும்புலி மறவர்கள்



கரும்புலி மறவரே கரும்புலி மறவரே
எம் ஈழ மக்களுக்கு ஏற்றம் புரிந்தீரே
எம் ஈழ மக்களுக்கு ஏற்றம் புரிகையிலே
வெந்தழிந்தாலும் வீழ்விலை என்றீரே

கரும்புலி மறவரே கரும்புலி மறவரே
நசுக்குண்ட தமிழீழத்தின் நலத்துக்கு உழைத்தீரே
நசுக்குண்ட தமிழீழத்தின் நலத்துக்கு உழைக்கையிலே
பெருக்குண்ட துயரெலாம் தூசுகள் என்றீரே

கரும்புலி மறவரே கரும்புலி மறவரே
தீந்தமிழீழத்தின் மலர்ச்சிக்கு உதவினீரே
தீந்தமிழீழத்தின் மலர்ச்சிக்கு உதவுகையில்
ஏய்ந்த துன்பமும் இன்பமே என்றீரே

கரும்புலி மறவரே கரும்புலி மறவரே
இழந்த தமிழீழம் ஈட்ட முனைந்தீரே
இழந்த தமிழீழம் ஈட்ட முனைகையிலே
உழந்த நெஞ்சிலும் உவகையே என்றீரே

கரும்புலி மறவரே கரும்புலி மறவரே
என்மொழி என்னினம் என்நிலம் என வாழ்ந்தீரே
என் மொழி என்னினம் என்நிலம் என வாழ்கையிலே
புன் மொழி கேட்பினும் புன்னகையுடன் சிந்தனை செய்து
எம் மொழியை எம்மினத்தை எம்நிலத்தை
சிறப்புடனே காத்திடற்கே என்றீரே

கரும்புலி மறவரே கரும்புலி மறவரே
இனித் தமிழீழத்தையே எண்ணி வெடித்தீரே
இனித் தமிழீழத்தையே எண்ணி வெடிக்கையிலே
பனித்த கண்ணீரையும் பாங்கே மறைத்து
தனித்த எம் மக்கள் செழித்த வாழ்வுக்கே என்றீரே

இனித் தமிழீழ மக்கள் இழிவை
இம்மியும் பொறுக்கமாட்டார்
தனித் தமிழீழம் வாங்க
இனியும் பின்வாங்கமாட்டார்
தீக்குழம்புருக்கித் தெறிக்கும்
எரிமலை போல் கொதித்தெழுவர்
எம் தமிழீழம் எமக்கினி மலரும்
வீழாது உம்புகழ் விளைய மாளாது உம்வீரம்

உலகமெலாம் உம் புகழ் செழிக்க
உலகிலுள்ள தமிழரெலாம் ஒன்று கூடி
பெரும் புரட்சி செய்து
யார் யாரோ அழித்த எம்மினத்தை
உம் நினைவால் திரண்டு கூடி
யாப்புறவே ஈழம் காண்போம்!.

**-தமிழ்நிலா.**

# யாதுமாகி !! யாவுமாகி !!



'பட்பட்பட்ட்ட்..பட்படபட.பட்ட்ட்ட்'

சற்றுக் கிட்டத்தில் எங்கோ வெடிச்சத்தம் கேட்டது. இன்றைக்கு தும்பிகளின் நடமாட்டம் கொஞ்சம் அதிகம்தான். வெளியில் வந்து பார்த்தபோது, ஒரு உலங்கு வானூர்தி கண்ணாம் பற்றைப் பக்கமாக சுற்றிச் சுற்றி சுடுவது தெரிந்தது.

'எதையோ பார்த்து வெருண்டிட்டாங்கள் போல. ஆனா. ஏன் இண்டைக்கு இப்பிடி ஓடித்திரியினம் எங்கையாவது அடி விழுந்திட்டுதோ?'

சற்று நேரத்தில் தும்பிகள் ஒவ்வொன்றாக கிழக்குப் பக்கமாக போய் மறைய ஆகாயம் அமைதியானது. அசாதாரண அமைதி. ..

எதையோ காத்துக் கிடப்பதைப்போல.

திரும்பி எதிர்ப்புறமாகப் பார்த்தேன். தூரத்தில் ஒழுங்கையில் அம்மா கடகத்துடன் வருவது தெரிந்தது. கடகத்தில் புல்லுக்கட்டைக் காணவில்லை. அப்ப, ஏன் போனா? இந்த மத்தியானப் பொழுதில் ஆராவது தோட்டத்துக்கு புல்லுப் புடுங்க போவினமா?.. அம்மா இப்ப கொஞ்ச நாளா ஏன் ஒரு மாதிரி நடந்து கொள்ளுறா? விடை தெரியாத கேள்விகள். சில நாட்களாகவே அம்மா இப்பிடித்தான் எந்தக் கைவேலையிலும் அடிக்கடி எட்டி படலையைப் பாப்பாள்.

'ஆரோ வாற மாதிரி இருந்துது' என்று தனக்குள்ளே முணுமுணுப்பாள்.

மனம் எதையோ நினைத்து எங்கோ உழன்று கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது.

கடகத்தைக் கீழே போட்டுவிட்டு ஆயாசத்துடன் திண்ணையில் உட்கார்ந்தாள் அம்மா.

'இந்தாணை!!.. இந்தத் தேத்தண்ணியைக் குடி! இந்த வெயிலுக்கை ஏன் போனனீ?'

அம்மா அதையெல்லாம் பொருட்படுத்தேல்லை.

'ஆரும் வந்தவையே?' ஒருவித கலக்கம் குரலில்.

'ஆர்..?'

பதில் எதுவும் சொல்லாமல் தூணில் சாய்ந்து கண்ணை மூடிக்கொண்டாள்.

ஒட்டிய முகமும் ஒளியிழந்த கண்களுமாக .. அம்மா எப்படி மாறிப்போனாள். இப்படியா இருந்தாள் முன்பு? எந்த வேலையிலும் ஒரு நேர்த்தி. எதிலும் நிதானம். தீர்க்கமாக முடிவெடுப்பாள் அம்மா. அப்பாவுக்கு அதெல்லாம் ஒரு பெருமை. அந்தப் பெருமையெல்லாம் அண்ணா வீட்டை விட்டுப் போகும் மட்டும்தான்.

'காலத்தின் தேவை அம்மா. இப்பிடியே சும்மா இருந்து நாங்கள் அழிஞ்சு போகேலாது. நீங்கள் ரெண்டு பேரும் என்னைச் சரியாத்தான் வளத்திருக்கிறீங்கள்.'

கிளம்பிப் போகுமுன் அண்ணா உறுதியாகச் சொல்லிவிட்டான். விடயம் உண்மையானதுதான். ஆனால் தனக்கென்று வரும்போது அம்மாவும் அப்பாவும் நிலைகுலைந்து போனார்கள். எனக்கு புரிந்தும் புரியாத நிலை. அதுக்குப் பிறகு கொஞ்சக் காலம் அம்மா மறைவா அழுவா, அப்பா தேற்றுவார். பிறகு அப்பா இடிஞ்சுபோய் இருப்பார், அம்மா ஆறுதல் சொல்லுவா. நானும், அண்ணை

இல்லாத வீடு வீடே இல்லை என்று நினைப்பன்.

கொஞ்சக் காலம் கழிச்சு அண்ணா வந்தான். சாரமும் சேட்டும் போட்டிருந்தான். மாறியிருந் தான். திடமான சிந்தனையுடன், தெளிவாக ஒரு பெரிய மனுசன் போல இருந்தான். அம்மாவும் அப்பாவும் பூரித்துப் போயினர். பக்கத்திலயே இருந்து தடவித்தடவி அம்மா சாப்பாடு குடு-த்தா. இல்லாத தாடியை அப்பா பெருமையோட நீவி விட்டுக்கொண்டார். எனக்கு கொஞ்சம் மன வருத்தம்தான். எல்லாரையும் போல அண்ணா ஏன் சீருடையும் சப்பாத்தும் போடேல்ல? ஒவ்வொரு வேலையையும் வேறவேற மாதிரி செய்யவேணும் என்றார் அண்ணா. எனக்கு விளங்கின மாதிரியும் இருந்தது விளங்காத மாதிரியும் இருந்தது.

முகாமில இருந்து ‘அவன்’ அடிக்கிற ‘ஷெல்’ எங்கட ஊரிலையும் வந்து விழும். ரெண்டு மூண்டு தரம் கிபிரும் புக்காராவும் அடிச்சுது. அடிக்கடி தும்பியள் வந்து சுட்டிட்டுப் போகும். றோட்டுக்கரை தோட்டத்தில வேலை செய்து கொண்டிருந்த சிலபேர் செத்துப் போச்சினம். அது ஊருக்குள்ள கொஞ்சம் பயத்தைக் கிளப்பிச்சுது. எங்க பார்த் தாலும் பதுங்கு குழி தோண்டிச்சினம். நாங்களும் வீட்டிலை ஒன்று கிண்டியிருந்தம். அதுக்குப் பிறகு நிறையச் சண்டையள். ஊருக்கையும் நாலை-ந்து வித்துடல்கள் வந்துது. ஒவ்வொரு தரமும் வித்துடல் வர நெஞ்சமெல்லாம் பதைபதைக்கும். அது இன்னொரு வீட்டுக்கு வந்தது என்ற பின்பும் சோகம் மனதைப் பிழியும். சுற்றிவர எங்கள் காவல் தெய்வங்கள் நிற்கிறார்கள் எண்ட துணிச்சல்தான் எங்கள் நாளாந்த வாழ்வை நகர்த்திச் சென்றது.

ஒரு நாள். அப்பாவுக்கு நெஞ்சுக்குத்து. பட் டென்று போய்ச் சேர்ந்திட்டார். அம்மாவும் நானும் அனாதையா நின்றோம். அண்ணாவால அதுக்கும் வர முடியேல்ல. அண்ணான்ர கூட்டாளியள் எல்லா த்தையும் நின்று ஒப்பேற்றினர். முந்தியென்றால், ஊருக்குள்ள இது ஒரு பெரிய கதையாயிருக்கும். இப்ப, எல்லாருக்கும் விளங்குது. அண்ணாக்கு வரேலாமப் போச்சு என்று ஒரு ஆற்றாமை. அப்பா இல்லாத எங்கள் வீடு தாமதமாக என்றாலும் வழமைக்குத் திரும்பியது.

இப்ப என்ன?

“என்னம்மா..?”

“என்னவோ தெரியேல்லை.. கொஞ்ச நாளா மனசு கிடந்து அடிக்குது.. ஏதோ..படபடவெண்டு வருது.”

ஒழுங்கையில சில பேர் கதைத்துக் கொண்டு போச்சினம். கையில பத்திரிகை.

“ என்னனண்ணை புதுசா..?”

“அடி விழுந்திட்டுதல்லே!!! சிறப்புப் பத்திரிகை வந்திருக்கு. அடிபுடிபட்டு வாங்கி வாறம். .இந்தா பார்..” ஒன்றை என்னிடம் நீட்டிவிட்டு நகர்ந்தினம்.

திரும்பி அம்மாவைப் பார்த்தேன். அவவின் இதயம் வாயில் துடிப்பது தெரிந்தது. இருவரும் எதுவும் பேசவில்லை. அதன்பிறகு அன்று முழுக்க நாங்கள் பச்சைத் தண்ணிகூட வாயில வைக் கேல்லை. ஏதோ ஒரு இனம் புரியாத நடுக்கம்.

மறுநாள். காலை பத்துமணி இருக்கும். மூன்று பேர் படலையடிக்கு வந்தினம். தெரியாத ஆக்கள். அப்பான்ரை பேரைச் சொல்லி வந்த இடம் சரி தானா என்று உறுதி செய்து கொண்டினம்.

“ ஓம்..தம்பி! வாருங்கோ!”

அம்மா இப்ப முற்றும் துறந்த நிலையில் இருந்தா. நிதானமா உள்ளுக்கு கூப்பிட்டா. வந்தவை எதுவுமே பேசேல்லை. ஒரு பயமுறுத்தும் அமைதி. தலையைக் குனிந்துகொண்டு அஞ்சலிக்கு நிற் கிற மாதிரி நின்றினம்.

“சொல்லுங்கோ” கடைசியா அம்மா வாய் திறந்தா.

“ அம்மா..!!.. நேற்று.” தளதளக்கும் குரலில் ஆரம்பித்தார் ஒரு அண்ணா.

அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் மடை திறந்து கொண்டது. சேலைத் தலைப்பை வாயில் வைத்து அமுக்கி கேவலை அடக்கிக் கொண் டாள். முதலில் எனக்கு எதுவும் விளங்கவில்லை. பிறகு... நான் கூக்குரலிட்டு அழுவதற்கு முன், அம்மா என்னை இழுத்து மடியில் சாய்த்து என்னு டைய குரல் வெளியேறாது பார்த்துக் கொண்டாள்.

பக்கத்து வீட்டு சரசக்கா படலையைத் திறந்து விறுவிறுவென்று வருவது தெரிந்தது.

“ ஆரோ ஆக்கள் வந்தவையாம்..???”

இப்ப, ஆராவது புதுசா வீட்டை வருகினம் என்றால் எல்லாருக்கும் நெஞ்சிடிதான்.

அம்மா முகத்தை அவசரமாகத் துடைத்தாள். நானும் கையில் ஒரு புத்தகத்தை எடுத்து பாசா ங்கு செய்தேன். அம்மா பாய்ந்து அடுக்களை-க்குள் புகுந்து கொண்டாள்.

“ஓம் சரசு! தெரிஞ்சாக்கள் வந்திருக்கினம். தேத்தண்ணி போட்டிட்டு வாறன்.. அலுவலே?”

அம்மா பிரயத்தனப்பட்டாள்.

சரசக்கா சுற்றிவரப் பார்த்து எல்லாம் இயல்பா யிருப்பதாக நம்பி வீடு திரும்பினாள்.

“படம் வைக்கேலா என்ன?” கேவலுடன் அம்மா.

‘ஊரறியாமல் உறங்கும் உண்மை’. அம்மா புரிந்து கொண்டாள் என்ற நன்றியறிதலுடன் அவர்கள் புறப்பட்டனர்.

இவர்கள் வீடுகளுக்கும் யாரோ ஒருநாள் போவா ர்கள். வலித்தது.

“தம்பியவை!! முடிஞ்ச நேரமெல்லாம் வாங்கோ..!”

என்றோ எடுத்து, நிறம் மாறிப் போயிருந்த புகைப்படத் தொகுப்பை அம்மா பெட்டியிலிருந்து எடுத்தாள். சிறுவனாக, அரைக் காற்சட்டையும் கையில் புத்தகமுமாக அண்ணா அதில் சிரித்துக் கொண்டிருந்தான்.

-பாரி-

# கூட்டாய்த் துணிந்தெழுந்து கூடித்தேரிழுப்போம்...

அணியணியாய் நாங்கள்
அண்ணனும் தம்பியரும்
அக்காளும் தங்கையராய்
அறங்கொண்ட வாழ்வுதனில்
அண்ணனின் வழியினிலே
துணிந்தெழுந்து நின்ற
துவழாத காலங்கள்...

பணியொன்றே குறியாய்ப்
பகைதீர்த்துப் படை நடந்து
பாடித் திரிந்தவேளைகள்
குனியாத தலைகளும்
குன்றாத வீரங்களும்
நெஞ்சாரப் பொய்யிலா
வாழ்வில் அஞ்சோமே
யார்க்குமென்று

பஞ்சமே இல்லாப்
பாசம் நிறைவாழ்வு
நினைத்துப்பார்க்கையில்
நீண்ட நெடுமூச்சு
நெஞ்சைச்சுடுகிறது...

தலைகளை மீண்டும் நிமிர்த்தி
தம்மைக்கொடை தந்த
தன்னிகரில்லாத் தெய்வங்களின்
தாள்களைத் துணைகொண்டு
தனித்து நின்ற
தடங்கள் போதுமென்று
குனிந்த தலைகளை நிமிர்த்தி
கூட்டாய்த் துணிந்தெழுந்து
கூடித்தேரிழுப்போம்...

-காந்தள்-




சுவிட்சர்லாந்தில் மாநிலங்களவைக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் இலங்கை பெண்! இலங்கை யில் பிறந்த பரா ரூமி சோலோதர்ன் மாநிலங்கள வைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பின் பிஷப் கல்லூரியில் 6 வயது வரை படித்த அவர், சுவிஸ் கன்டோனல் மாநிலங்களவைக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் இலங்கைப் பெண் ஆவார்.

ரூபி தன்னைப் பற்றி.....

ஆறு வயதாக இருந்தபோது பெற்றோருடன் சுவிட்சர்லாந்திற்கு குடிபெயர்ந்தேன். அதனால் எனது கடந்தகால நினைவுகள் அனைத்தையும் என்னால் நினைவுபடுத்த முடியவில்லை. ஆனால் மொத்தத்தில், எனக்கு ஒரு அற்புதமான குழந்தைப் பருவம் இருந்தது என்று கூறுவேன்.

நான் வகுப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்டபோது மிகவும் கடினமாக இருந்தது, மேலும் ஆசிரிய ரையோ அல்லது மாணவர்களையோ என்னால் புரி ந்து கொள்ள முடியவில்லை. முதல் வருடத்தில் புதிய நண்பர்களைக் கண்டுபிடிப்பதும் கடினமாக இருந்தது. எல்லாமே ஒரு வருடத்திற்குப் பிறகு இய ல்பாகியது. ஒரு குழந்தையாக நான் ஜெர்மன் மொழியை விரைவாகப் புரிந்துகொண்டேன்.

எனது பாடசாலை படிப்பை முடித்த பிறகு, நான் ஒரு செவிலியராக (பி.எஸ்சி) தகுதி பெற்றேன். பொதுவாக மற்றும் உள்ளுறுப்பு அறுவை சிகி ச்சையில் நிபுணர் செவிலியராக பணியாற்றினேன். நான் எப்போதும் மக்களுடன் நெருக்கமாக இருக்க விரும்பினேன், அதனால் நான் இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தேன். அங்குதான் வாழ்க்கை, உரை யாடல்கள் மற்றும் உண்மையான வேலைகளை அனுபவிக்கவும் உணரவும் முடியும். நான் எப்போ துமே அரசியலில் ஆர்வமாக இருக்கிறேன், கட்சி அரசியல் அல்ல. எனது கல்வியை முடித்தபின், மக்களுக்காக அதிகம் செய்ய வேண்டும் என்ற மிகு ந்த ஆசை எனக்கு இருந்தது. அரசியல் ரீதியாக சுறுசுறுப்பாக மாறுவதற்கு முன்பு சொந்தமாக பல திட்டங்களைத் தொடங்கினேன். நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் நீதி ஆணைய உறுப்பினராக பதவியேற்ற பின்னர், நான் இப்போது 2 மாதங்கள் பதவியில் இருக்கிறேன், இந்த அனுபவத்தை மிகவும் மதிப்புமிக்கதாகக் காண்கிறேன்.

நான் எப்போதுமே மக்களுக்கு உதவுகிறேன், கவனித்து வருகிறேன், அதனால்தான் நான் ஒரு செவிலியராக என் தொழில் வாழ்க்கையைத் தொடங்கினேன், எப்போதும் இந்த தொழிலை மீண்டும் கற்றுக்கொள்வேன். சமுதாயத்திற்காக மேலும் பலவற்றைச் செய்வதற்கும், நமது எதிர் காலத்தை ஒன்றாகக் கட்டியெழுப்புவதற்கும் பலப்படுத்துவதற்கும் ஒரு வலுவான விருப்பத்துடன், எனது மேலதிக கல்வியின் பின்னர் எனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினேன்.

இந்த மரியாதைக்குரிய பதவியை 99 பிற நாடா ளுமன்ற உறுப்பினர்களுடன் வகிப்பது ஒரு மரி யாதை மற்றும் பாக்கியமான விடயமாகும். நான் இளைய தலைமுறை மற்றும் பெண்களின் பிரதிநிதி யாக மட்டுமல்லாமல், புலம்பெயர்ந்தோர், குறிப்பாக தெற்காசியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஒவ்வொரு சிறுபான்மைக் குழுவின் பிரதிநிதி யாகவும் என்னைப் பார்க்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, பல இலங்கையர்கள் என்னுடன் எனது வெற்றியைக் கொண்டாடுவதையும் கௌரவிப்ப தையும் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

முனைவர் கு.அரசேந்திரன்

# கரோனாவிற்கு மருந்தளித்த தேசியத்தலைவர்

உலகை மிதித்த கரோனா எம் குடும்பத்தையும் என்னையும் மிதித்தது. உயிர் பிழைக்க மருத்துவமனை புகுந்தோம்.

நோய், துன்பம், வருத்தம், disease ஆகிய சொற்கட்கெல்லாம் வேரும் விளக்கமும் எழுதியவன் யான். எந்தவொன்றையும் சந்தித்துப் பார்த்தால் தான் அதன் ஆழமும் உண்மையும் தெரியவரும். Corona நோய்ச்சொல் அண்மையில் பரவுமுன் 2012 இலேயே இம்மேலை இந்தோ-ஐரோப்பியச் சொல், எவ்வாறு ஒரு தமிழ் மூலத்திலிருந்து பிறந்த தென்பதைச் செம்மொழி தமிழாய்வு நடுவணரசு நிறுவனத்திற்கு ஆய்வறிக்கை வழி எழுதிக்கொடுத்துள்ளேன். இந்தக் கரோனா நோயை நேரில் சந்தித்தபோது கலங்கினேன். என் குடும்ப, உலகத் தமிழ் உறவுகளிலிருந்து முடியலாம் என்றும் நினைக்க வேண்டியதாயிற்று. என் மகன் முதலில் இத் தொற்றுக்கு ஆளானான்.

மருத்துவமனையில் சேர்த்து மீட்டெடுத்து இல்லம் வந்தேன். அடுத்து மனைவிக்கு. மகள் மருத்துவர் ஆதலால் வீட்டில் வைத்தே அம்மாவைக் காப்பாற்றிவிட்டாள். எனக்கு வந்தபோது மனைவியும் இருமக்களும் கலங்கி மருத்துவமனையில் சேர்த்துக் காக்கப் போராடினார்கள்.

இரவில் தனிமை. தனிமை என்றால் தனிமையாகப் போகிறோமா என்ற தனிமை. மூச்சு உள்ளேயும் போகவில்லை வெளியேயும் வரவில்லை. குப்புறப் படுத்துப் புரண்டு, உருண்டு எழுந்து சாய்ந்து உட்கார்ந்து கலங்கினேன். என்ன செய்வது? மூச்சுக்கு மூச்சு தலைவரே என் மூச்சு என்பாயே, அவரை நினைத்துப் பார்! உனக்கு மூச்சுவரும் என்றது ஓர் ஆழ் மனக்குரல். அண்ணா என்றேன்! தேசியத் தலைவரே! என்றேன்.

நீண்ட வரலாறு நிழலாடியது.

தாயக விடுதலைக்காக 13 நாள்சொட்டு நீரும் அருந்தாமல் மூச்சுவிடவும் மூச்சு இழுக்கவும் முடியாமல் துடிதுடித்து மடிந்த மாவீரர் பெருந்தகை திலீபனை நினைத்தேன். கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர்.

நச்சுக் குப்பியினைக் கடித்துப் “புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்” என்றார்களே! ஆயிரமாயிரம் மாவீரர்கள், அவர்களை நினைத்தேன். என் துன்பம் எனக்குத் தெரியவில்லை.

என் தமிழ்க் குழந்தைகளைக் கொதிக்கும் தார்க் குண்டத்தில் சிங்களவன் வீசிக்கொன்றான். தமிழ்ப் பெண்களைப் பாலியற் கொடுமைக்கு ஆளாக்கிக் கொன்றொழித்தான். இந்தக் கொடுமை கண்டு அழுது புரண்டது தமிழினம்.



“துன்பத்தைக் கொடுப்பவனுக்குத் துன்பத்தைத் திருப்பிக் கொடு” என்று தலைவர் முடிவெடுத்தார். நாம் யார்? நமக்கென்ன வலிமை? நமக்கு யார் துணை? எதிரியின் காவல்துறை, படைத்துறை அவனுக்கு மட்டுமே துணை செய்யும் உலக அரசுகள். இவை எல்லாவற்றையும் கணக்கில் எடுக்காமல் எம் அண்ணா எம் தலைவர் அன்று களம் புகவில்லை.

மாற்று என்ன? அழிப்பவனிடம் மண்டியிடலாமா? அதிலொன்றும் தீர்வில்லையே! அட போராடுவோம். வெல்வோம் என்று ஊர்கூட்டினார். உலகை மிரள வைத்தார். எதிரியைப் பணிய வைத்தார்.

1995 அக்டோபரில் இந்திய சோனியா அரசு ஆதரவுடன் சந்திரிகா அம்மையார் தொடுத்த யாழ்ப்பாணக் கடும் போர் நடந்தது. உலக வரலாற்றில் நிகழாத கொடுமை.ஐந்து இலட்சம் யாழ்ப்பாண மக்களும் புலிகளோடு வெளியேறி வன்னி புகுந்தனர்.

அந்த ஆண்டு நவம்பர் 27 மாவீரர் நாள் உரையில் தலைவர் பேசினார். B.B.C வானொலியில் கேட்கிறேன். ” எமது மக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த சொந்த மண்ணிலிருந்து வெளியேறியுள்ளார்கள். எவ்வளவு துன்பங்களை நாங்கள் சுமந்தாலும் ஒரு பொழுதும் அடிமை அரசின்கீழ் குடிமக்களாக வாழ விரும்போம் என்று முடிவெடுத்து எம்மோடு வெளியேறி விட்டார்கள். எம் மக்கள் எம் மீது கொண்ட இந்த நம்பிக்கை எம் மக்களுக்காகத் தொடர்ந்து நாம் போராட வேண்டும் என்ற உறுதியை எமக்குக் கொடுத்துள்ளது. எமது மக்களை இக் கொடுமைக்கு ஆளாக்கிய சிங்களப் படைக்குத் தக்க பாடம் புகட்டுவோம்! எமது மண்ணில் இரத்த ஆறு ஓடும்.”

செயல் முந்தி, பேச்சு பிந்தி என்பது உலகில் யாருமே கூறாத எம் தலைவரின் பொன்மொழி. யானறிய தலைவர் சொல்லிச் செய்தது இதுவோ என நினைக்கிறேன். என்ன நடந்தது? 1996 சூலையில் முல்லைத்தீவுச் சமர் மூண்டது. எதிரியின் முப்படையும் முடங்கியது. கருகிச் சாம்பராகியது. கொழும்பில் அதிபராக இருந்த சந்திரிக்காவால் என்ன செய்ய முடிந்தது? முட்டுக்கொடுத்து நானிருக்கிறேன் என்ற நான்காம் வல்லரசால் என்ன செய்ய முடிந்தது?

**“சுட்டது குரங்கு எரிசூறை யாடிடக்**
**கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்**
**பட்டனர் பரிபவம் பரந்தது எங்கணும்**
**இட்டது அரியணை இருந்தது என்னுடல்”**

என்று அனுமன் இலங்கையை எரித்தபோது இராவணன் கூறுவதாக இப் பாடலை எழுதினார் கம்பர். கம்பர் பெருமானின் ஆற்றல் மிக்க அந்தப் பாடலை இன்னும் எளிமையாக்கி முல்லைத்தீவு முகாமினை எம் தலைவர் படை தகர்த்தெறிந்த போது சந்திரிகா அம்மையாரின் மனநிலை பின் வருமாறு இருந்திருக்க வேண்டுமென்று அன்று என் தமிழ் மனம் பாடிப்பூரித்தது.

**“சுட்டனர் புலிகள் எரிசூறை யாடிடக்**
**கெட்டது முல்லைத் தீவுக்கொடுமுகாம்!**
**படைகள்கலன்கள் பட்டன் பேரவமானம்**
**பரவிற்று உலகெலாம்**
**இட்டது அதிபர் எனும் பெரும்பதவி**
**இருந்தது என்னுடல் வீணே!”**

உலகில் நாம் நம்மை வலிமை அற்றவர்களாக நினைத்துக் கவலைப்படுவதால் நமக்கு ஒரு பயனும் விளையாது! உலகிற்கு நாம் நம்மை யாரென்று காட்டுவோம். வரலாறு படைத்து வரலாறு எங்கும் வாழ்ந்த இனம் மீளும்! மீட்க வேண்டும் என்று போர்முரசு கொட்டியவர் தலைவர். கலிங்கத்தில் மாமன்னன் அசோகன் எதிரிகளை வெட்டிச்சாய்த்துக் குருதிவெள்ளம் கண்டு புத்தம் புகுந்தான். எம் தலைவர் எதிரி மக்களெனச் சிங்களவரை நினைத்ததில்லை. சிங்களப் பௌத்த அரசு தமிழ் மக்களைக் கொன்று அவர்களின் குருதிவெள்ளம் கண்டு மகிழ்ந்தது. எம் தலைவரோ வன்கொடுமைப் படைக்கொலைஞர்களை மட்டும் வீழ்த்தும் பேறறம், போரறம் கண்டார். மாமன்னன் அசோகனினும் பேறப் பிறப்பாய் பிறந்தவர் எம் தேசியத் தலைவர்.

மருத்துவமனையில் உயிருக்குப் போராடிய நான் இப்படி என் மூச்சாய் இருக்கும். தலைவரை அவர் வரலாற்றை எண்ணிப் பார்த்தேன். பெருமிதம் பொங்கியது. விம்மி விம்மிக் குமுறினேன். மூச்சடைப்பு நீங்கிவிட்டது. நிமிர்ந்து உட்கார்ந்தேன் எழுந்து சிறிது நடந்தேன். கரோனா இனி உன்னிடம் வருவேனா என்று ஓடியது. கரோனாவிற்கு மருந்தளித்த எம் அண்ணா! தேசியத் தலைவரே நீர் எனக்குத் தலைவருடன் மருத்துவரும் ஆனீர்!

மருத்துவமனையில் இருந்து எழுதியது.

27/05/21.

**செயல் முந்தி பேச்சு பிந்தி என்பது உலகில் யாருமே கூறாத எம் தலைவரின் பொன்மொழி**

# ஆயிரம் முட்டையிட்ட ஆமைகள்

-பகலவன்-

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில், முத்தி ரைச் சந்தைக்குக் கிட்ட அம்பலவாணர் குமார வேலு என்பவர் காலமாகிவிட்டார். 'அவரை நாட்டுப் பற்றாளராக அறிவிக்கவும்' இரு வாக்கியங்களில் அரசியல்துறை நடுவப் பணியகத்துக்கு செய்தியை அனுப்பினர். ஒரு போராளி இவரது சாவு தொடர் பாக பொட்டம்மானுக்கு அறிவித்தார். சமாதானம் நிலவிய காலப்பகுதி ஆதலால், அரசியற்துறை நடுவப்பணியகம் நல்லூர் வட்டப் பொறுப்பாளரிடம் காலமானவரின் விபரங்கள் -- போராட்டப் பங்களிப்பு பற்றிய அறிக்கையினை அனுப்புமாறு கோரியிருந்தது. ஏற்கனவே தனது பகுதியில் நிகழும் மரணச் சடங்கு என்ற வகையில் அங்கு போயிருந்தாலும் இம்முறை விபரங்களைப் பெறச் சென்றார் வட்டப் பொறுப்பாளர். திருமதி குமாரவேலுவைத் தனியாக அழைத்த அவர் தன்னை அறிமுகப்படுத்திய பின் திரு குமாரவேலுவின் போராட்டம் பங்களிப்புப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைக் கூறி உதவுங்கள் என வேண்டிக் கொண்டார். அதற்கு அவர்

"எனது கணவருக்குப் போராளிகளுடன் தொடர்பு இருந்தது என்பதே இப்போது நீங்கள் சொல்லித் தான் தெரிகிறது. உண்மையில் இது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்று பதிலளித்தார்.

நல்லூர் வட்டப் பொறுப்பாளர் குழம்பியே விட்டார். பெண்டாட்டிக்குத் தெரியாமல் கணவர் அப்படி என்ன பங்களிப்புச் செய்திருக்க முடியும் என்று சிந்தித்த அவர் நடுவப் பணியகத்துக்கு விடயத் தைத் தெரிவித்தார். அவர்கள் தலைவர் பிரபாகரனோடு தொடர்பு கொண்டு நாட்டுப்பற்றாளர் என்று அறிவிக்கக் கோரிய போராளியின் பெயரைக் குறிப்பிட்டு நடந்த விடயங்களையும் தெரிவித்தனர். அதற்குத் தலைவர் அளித்த பதில்,

"அவர் சொன்ன மாதிரியே அறிவியுங்கள். விபரங்களைப் பிறகு பெற்றுக் கொள்ளலாம். அதனைப் பெற அவரை உங்களுடைய இடத்துக்கு அழை



க்க வேண்டாம். முன் கூட்டியே அவருக்கு அறிவித்து அவருடைய இடத்தில் போய் விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். இது மட்டுமல்ல அவர் இனிமேலும் யாரையாவது இது போன்று அறிவிக்க வேண்டுமெனக் கோரினாலும் இதே நடைமுறையினையே பின்பற்றுங்கள்" என்பதாகும்.

'காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது' என்ற வள்ளுவர் வாக்கை அவர் அறிந்திருந்ததாலேயே இவ்வாறு குறிப்பிட்டார். போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் உதவியவர்கள் கட்டாயம் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள், மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள். எனவே இந்த விடயத்தில் காலதாமதம் ஆகிவிடக் கூடாது என்பதே அவரது நிலைப்பாடு. 1982--1983 காலப் பகுதியில் திரு குமாரவேலு என்னென்ன வகையில் பங்களிப்புச் செய்திருந்தார் என்பது குறித்து சங்கர் என்ற பெயரில் போராளியொருவர் 'வேறென வாழ்ந்தவர்' என்ற தலைப்பில் நமது ஈழநாடு பத்திரிகையில் நன்றியோடு ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் பொட்டம்மான்--ஞானம் முதலான போராளிகள் போராட்டத்தில் முழு நேரமாக இணைந்த புதிதில் விசுவமடுவில் இருந்த தனது காணியில் அவர்களைப் பாதுகாத்த விடயமும் அடங்கும். இவ்வளவும் செய்தும் யாழ்ப்பாணத்தில் இருந்த தனது துணைவியாரோடு அவர் இது பற்றி எதுவுமே தெரிவித்திருக்கவில்லை என்பது அவரது சாவின் பின்பே புரியவந்தது.

* * * * * * * * *

மட்டுநகரில் ஒரு பெண்மணி இருந்தார். கல்லாறைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அவர். ஆண்டவனின் மறு பெயரால் அழைக்கப்பட்ட ஒரு போராளியின் சகோதரி. இவரது கணவர் கடமையின் நிமிர்த்தம் பிரபல பாடசாலை ஒன்றில் தங்கியிருந்தார். வாரத்தில் ஓரிரு முறை பகலில் வந்து ஒரு நேர உணவு உண்டு விட்டு பிள்ளைகளுடன் அளவளாவி விட்டுச் செல்வார். குடும்பப் பொறுப்பு முழுவதும் இப்பெண்மணியே சுமந்து வந்தார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்த தனது தம்பி படிப்பை இடைநிறுத்தி இயக்கத்தில் இணைந்து கொண்டமை குறித்து சிறிது வருத்தம். இருந்தாலும் அவர் மீதான பாசம் குறையவில்லை. அதனால் தம்பியோடு வரும் போராளிகளை உபசரித்து வந்தார். நாளடைவில் அந்த வீட்டின் இன்னொரு பக்கமாக இருந்த கொட்டகை ஒன்றுக்குள் போராளிகள் தங்கிவந்தனர். தமது கடமையின் நிமித்தம் வெளியில் சென்று வரும் அவர்கள் எத்தனை மணிக்குத் திரும்பினாலும் அங்கே சாப்பாடு தயாராக இருக்கும். அவர்கள் குளிப்பது, ஆடை தோய்ப்பது எல்லாம் அந்த வீட்டில் தான். ஒரு நாள் பகல் அப்



பெண்மணியின் கணவர் வந்தார். கொடியில் பல சாறங்கள் காய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"இதென்ன கன சாறங்கள் காயுது? இவ்வளவு சாறம் நம்ம வீட்டில் இல்லையே.." என்று கேட்டார்.

உடனே அந்தப் பெண்மணி சேவையராக இருக்கும் தமது உறவினரின் பெயரைக் குறிப்பிட்டு,

"அவன்ட லேபர் மார் வந்து தங்கினவங்க. அவங்கள் தான் தோய்ச்சுக் காயவைச்சிட்டுப் போயிட்டாங்கள்" என்றார். அந்தக் கொட்டகைக்குள் சேவையரின் சாமான்களும் இருந்தபடியால் இவரும் அதை முழுமையாக நம்பிவிட்டுப் போய்விட்டார். (அந்தக் காலத்தில் போராளிகள் பெரும்பாலும் சாறத்துடனேயே திரிந்தார்கள்.)

இக் காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இனர் தன்னாமுனைப் பகுதியில் ஒரு சிகரெட் வானைக் கொள்ளையடித்திருந்தனர். இது சம்பந்தமாக ஆராய்ந்த பொலிஸார் அச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். சிங்களவர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த போது ஜே.வி.பி என்ற ஒரேயொரு இயக்கம் மட்டுமே இருந்தது. தமிழரிலோ உருவாகியது--காணாமற்போனது-- கரைந்தது-- கலந்தது-- உடைந்தது என 36 இயக்கங்கள் இருந்தன. ஆனால் எதைப் பிடித்தாலும் புலி எங்கே என்று தான் பொலிஸார் கேட்பார்கள். அந்த வகையில் ஆரம்பித்த விசாரணை அந்த இளைஞரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

காசிஆனந்தனின் சகோதரி சிவமலரைக் காட்டிக் கொடுத்தான். தொடர்ந்து, திருமணமாகி சில நாட்களே ஆகியிருந்தும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குச் சாரதியாக பங்காற்ற

வந்த தனது சகோதரனை இனங்காட்டினார். அடுத்து இந்த வீட்டில் தான் புலிகள் தங்குவதுண்டு என இப் பெண்மணியின் வீட்டையும் காட்டிவிட்டார். அங்கே அச் சமயம் போராளிகள் எவரும் இருந்திருக்கவில்லை. அங்கே சென்ற பொலிஸார் ஏமாற்றமடைந்தனர். அப்போது அந்த இளைஞன் படுவான்கரையில் இன்னொரு வீடு இருக்கிறது என்று சொன்னார். உடனே வந்த பொலிஸாரில் இருவரை அங்கேயே இறக்கிவிட்டு ஏனையோர் படுவான்கரைக்குச் சென்றனர்.

வீட்டில் இருந்த பெண்மணியையும் பிள்ளைகளையும் அறையொன்றில் தள்ளி இருக்க வைத்துவிட்டு, தாமும் உள்ளேயே இருந்தனர். சிறிது நேரத்தில் மட்டக்களப்பின் மூத்த போராளி அங்கே சென்றார். என்ன ஒருவரையும் காணவில்லை என எண்ணியவாறு அவர் உள்ளே செல்லவும் உள்ளே இருந்த பொலிஸார் அவரை இழுத்து அறைக்குள் தள்ளினர். உடனே அப் பெண்மணி "என்ன வீடியோ கொப்பி வாங்கவா வந்தீங்க" என்றவாறு அவரின் அருகே வந்திருந்து அவரது இடுப்புப் பகுதியை பொலிஸாருக்குத் தெரியாமல் தடவிப் பார்த்தார். ஆயுதம் இல்லை என்பது உறுதியாகத் தெரிந்ததும் இப்போதைக்கு அசம்பாவிதம் எதுவும் நடக்காது என உணர்ந்து கொண்டார். சுகமில்லாதவர் போல் நடித்த அப் போராளி சில தடவைகள் இருமி வெளியே சென்று துப்பினார். அடுத்த தடவை வாந்தி வருவது போல் நடித்து வெளியே வந்ததும் பாய்ந்தோடிவிட்டார்.

சிறிது நேரத்தில் அப் பெண்மணியின் கணவர் வந்தார். அவரையும் உள்ளே இருத்தி விட்டனர் பொலிஸார். அவருக்கோ எதுவும் புரியவில்லை. தமது வீட்டுக்குள் ஏன் பொலிஸார் வந்தனர் என்று பேந்தப் பேந்த முழித்தார். அடுத்து அந்தப் பெண்மணியின் போராளியான சகோதரன் துவிச்சக்கர வண்டியில் கேற்றைத் திறந்த படி வந்தார். அங்கே மூத்த போராளி கொண்டு வந்த துவிச்சக்கரவண்டி காணப்பட்டது. ஆனால் வெளியில் எவரையும் காணவில்லை. உள்ளே போகலாமா விடலாமா என்று சந்தேகம்.

உள்ளே இருந்த பொலிஸார் அவரை உள்ளே கூப்பிடுமாறு வீட்டுக்காரரிடம் கூறினார். அதனால் அந்தப் பெண்மணியின் கணவர் "உள்ளே வரட்டாம்" என்று கூறினார்.

'என்ன உள்ள வரட்டாம் என்று கூறுகிறார் அத்தான், உள்ளே வா என்றே கூப்பிட்டிருக்கலாமே? இதில் ஏதோ பிரச்சினை இருக்கிறது' என்று யூகித்த அவர் துவிச்சக்கரவண்டியைப் போட்டுவிட்டு பாய்ந்தோடிவிட்டார்.

திரும்பி வந்த பொலிஸ் வாகனம் அனைவரையும் ஏற்றிச் சென்றது. விசாரணையின் போது விக்டர் பெரேரா என்ற எஸ்.பி.யும், பியசேனா என்ற பொலிஸ் உத்தியோகத்தரும் கடுமையாக நடந்து கொண்டனர். அப்போது சிறுமியாக இருந்த மகளின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்தபடி "உண்மையைச் சொல்" என்று அப் பெண்மணியை மிரட்டினர்.

அவரோ எங்களுக்கு எதிலும் சம்பந்தமில்லை என்றே சொல்லிக் கொண்டிருந்தார். சிறுமியின் தலையில் துப்பாக்கியால் தாக்கினர். மண்டை உடைந்து இரத்தம் வழிந்தது. ஆனாலும் அப் பெண்மணி அசரவில்லை. இதற்குள் ஈ.பி.ஆர்.எல். எவ் இளைஞர் கொஞ்சம் கூடுதலாகவே சொல்கிறார் என்றும் இப் பெண்மணியின் கணவர் எதுவுமே தெரியாத அப்பாவி எனவும் புரிந்து கொண்டனர். முடிவில் ஆண் பிள்ளைகளை மட்டும் வைத்துக் கொண்டு மூவரையும் விடுவித்தனர். தம்மால் இந்தக் குடும்பத்துக்கு இந்த நிலை ஏற்பட்டதே என போராளிகளுக்கு துக்கம். ஆனாலும் மாணவர்களான தமது பிள்ளைகளை எப்படியும் விடுவித்து விடுவர் என்றும் போராளிகள் தப்பியதே தனக்குத் திருப்தி என்றும் இப் பெண்மணி ஒருவர் மூலம் செய்தி அனுப்பினார்.

* * * * * * * * *

வடக்கே திரு குமாரவேலுவும், கிழக்கே இப் பெண்மணியும் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்தவர்கள். விவிலியத்தில் எபேச்சியார் 5 அதிகாரம் 5 வசனங்கள் 21 முதல் 31 வரை வடக்கேயிருந்த போதகரும், கிழக்கே இருந்த போதகரும் திருமணங்களை நடத்தி வைத்த போது கூறியிருப்பார்கள். 'புருசர்களே! தங்கள் மனைவிகளை தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூரவேண்டும். தன் மனைவியில் அன்பு கூருபவன் தன்னில் அன்பு கூருகிறான். மனிதன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து ஒரே மாமிசமாக இருப்பார்கள்' என்று திரு குமாரவேலுவின் திருமணத்தில் வாசிக்கப்பட்டிருக்கும். அது போலவே 'தெய்வ பயத்தோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் மனைவிகளே! கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறது போல உங்கள் சொந்தப் புருசருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல புருசனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறார்.' என்று இப் பெண்மணியின் திருமணத்தின் போது வாசித்திருப்பார்கள். எதிலும் ஒழிவு மறைவில்லாமல் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க வேண்டும் என போதகர்கள் நிச்சயம் போதித்திருப்பார்கள்.

தமது போராட்டப் பங்களிப்பு குறித்த விடயங்களைத் தவிர ஏனைய விடயங்களில் இருவரும்

தமது வாழ்க்கைத் துணைக்கு விசுவாசமாகவே இருந்திருக்கின்றனர். 'பிறப்பால் வந்த உறவுகளை விட பிணைப்பால் வந்த உறவுகளே வலிமையானவை.' என்ற கருத்துப்பட கண்ணதாசனும் எழுதியிருக்கிறார். ஆயினும் போராட்டம் பாதுகாக்கப் பட வேண்டும் என்ற எண்ணம் தான் இருவருக்குமிடையில் இருந்திருக்கிறது. பல குழந்தைகளைப் பெற்றுத்தந்து தன் குடும்ப பாரத்தைச் சுமந்த மனைவியிடம் கூட இரகசியத்தைப் பேணியிருக்கிறார் குமாரவேலு. பல குழந்தைகளுக்குத் தன்னை அன்னையாக்கி தன்னை முழுமையாக நம்பி, 'என்ன கன சாறங்கள் காயுது?' என்று கேட்ட தன் அப்பாவிக் கணவருக்குப் பொய் சொல்ல வேண்டி வந்ததே என்று அப் பெண்மணி நினைத்திருப்பார். தான் பொய் சொல்லி வாழ்ந்தாலும் தன் கணவருக்கும் இந்தப் போராட்டத்துக்கும் பொய்யாக வாழவில்லை என்ற மனநிறைவுடன் அவர் அண்மையில் கண்ணை மூடியுள்ளார்.

வடக்கே என்றாலும் கிழக்கே என்றாலும் எமது மக்கள் ஒரே உணர்வுடன் தான் இருந்துள்ளார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். 'ஆயிரம் முட்டையிட்ட ஆமை அசையாமல் போகும். ஒரு முட்டையிட்ட கோழி கொக்கரக்கோ என்று கூவுமாம்.' என்று கூறுவார்கள்.

'நாங்கள் தான் கிழக்கின் தேசியத்தை முதுகில் சுமந்தவர்கள். உராய்ந்து உராய்ந்து காயமேற்பட்டுத்திய வடுவைப் பாருங்கள்' என்று தமது முதுகைக் காட்டும் பல பிரமுகர்களுக்கு இவையெல்லாம் தெரியாத சங்கதிகள். ஏனெனில் வண்ணை ஆனந்தன் கூறியது போல, 'பழம் பழுத்தால் வெளவால் வரும்' என்ற மாதிரி நிலையில் வந்தவர்கள். அவர்களது நோக்கம் நிறைவேறிவிட்டது. இதில் போராட்டத்தையும் அதை வழி நடத்தியவர்களையும் கிண்டல் செய்து கொச்சைப்படுத்துகிறார்கள்.

தமிழ் அரசியல்வாதிகளும் அப்படித்தான். ஜே.வி.பி மற்றும் அதாவுல்லாவின் நிலைப்பாட்டில் உள்ளார்கள். வடக்கு வேறு, கிழக்கு வேறு, வடக்கில் எடுக்கும் தீர்மானங்கள் போல கிழக்கில் நாம் எடுக்கத் தேவையில்லை என கல்விமான்களும் சட்டத்தரணிகளும் நினைக்கிறார்கள். வடக்கே வந்து போராடிய போராளிகளின் குடும்பங்களும் கிழக்கே சென்று போராடிய போராளிகளின் குடும்பங்களும் கண்ணீர் வடிக்கின்றனர். குறைந்த பட்சம் எமது பிள்ளைகளைப் பயங்கரவாதிகள் என்றாவது சொல்லாமல் இருங்கள் என்று கூறுகின்றனர்.

ஆனால் அவர்கள் ஒலிவாங்கியைத் துடைத்துவிட்டு என்ன பாட்டைப் பாடி அடுத்த தேர்தலுக்கு வாக்கு கேட்பது என்று சிந்தித்த படி புறப்பட்டு விட்டார்கள். பாவம் காசி ஆனந்தன். அவரது வரிகள் இவர்களது வாயில் புகுந்து தம் கற்பை இழக்கின்றன.



# சிறப்பு முகாம் என்னும் சித்திரவதை முகாம்



தமிழகத்தில் சிறப்பு முகாம் என்னும் கட்டமைப்பு 1990 களிலிருந்து இன்றளவும் இயங்கி வருகிறது. அன்றைக்கு திமுக ஆட்சிகாலத்தில் தொடங்கப்பட்ட சிறப்பு முகாம் ஈழத் தமிழர்கள் அதிகமாக இந்தியா போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்து வரும் கால கட்டங்களில் தொடங்கப் பட்ட சிறப்பு முகாம்கள் ஜெயலலிதா காலத்திலும் விரிவாக்கப்பட்டு இன்று பல ஆட்சி மாற்றங்களுக்கு பிறகும் இயக்கப்பட்டு வருகிறது .

### சிறப்பு முகாம் என்றால் என்ன:

பெயரளவில் பல்வேறு நாட்டு கைதிகள் என்று சொல்லப்படுபவர்கள் இதில் அடைக்கப்பட்டு இருந்தாலும் பெரும்பான்மையாக ஈழத்தமிழர்களுக் காக உருவாக்கப்பட்டதே இந்த சிறப்பு முகாம். மத்திய அரசின் சட்டமான அயல்நாட்டவர் சட்டம் (Foreigners Act, 1946) என்ற கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த சிறப்பு முகாம், ஈழத்தமிழர்களை இந்திய அகதிகள் என்ற பெயரளவிலான அடையாளத்தில் வைத்துக்கொண்டு, (இன்றும் இந்திய அரசு சட்டப்படி முகாம்களில் வாழும் மக்கள் சட்டவிரோத குடியேறிகளே!) அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றங்கள், வழக்குகள், அச்சுறுத்தல்களை அயல்நாட்டவர் சட்டத்தின் ஊடாக கையாண்டு, கைது செய்து அடைக்கும் இடமே சிறப்பு முகாம். மத்திய அரசின் சட்ட வரைவுக்கு கீழ் இச்சிறப்பு முகாம் அமைக்கப்பட்டிருந்தாலும், ஒட்டுமொத்தமான செயல்பாடுகள் வரைவுகள்,

**இரவிபாஹினி**

கட்டுப்பாடுகள், மாநில அரசின் தலைமைக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது அகதிகளுக் கான தனிச்சட்டமோ சர்வதே அகதிகளுக்கான எந்தவித கையொப்பங்களையோ இடாத இந்திய அரசு முகாம், சிறப்பு முகாம் எனும் கட்டமைப்பில் அகதிகளை வைத்திருப்பதற்கு மாநில அரசுகளின் துணையோடு மறுவாழ்வுத்துறை, உளவுத்துறைப் பிரிவு, பொதுத்துறை போன்ற முறைமைகளுக்கு கீழ் முகாம்களையும் சிறப்பு முகாம்களையும் செயல்படுத்தி வருகிறது.

அதனாலேயே இன்றைக்கு 20 நாளுக்கு மேலாக நடக்கும் சிறப்பு முகாமில் இருக்கும் தமிழர்களின் போராட்டத்தின் கோரிக்கை கூட மாநில அரசை நோக்கியே இருக்கிறது. இதற்கு முன்பும், கடந்த இரண்டு ஆண்டுகளாக பல்வேறு விதமான போராட் டங்களை சிறப்பு முகாமில் இருக்கும் அகதிகள் இந்த அரசுகளிடமே விடுதலைக் கோரிக்கையை முன்வைத்து போராடிக் கொண்டு இருந்தார்கள், இருக்கிறார்கள். ஆனால், எதார்த்தம் எதுவென் றால் மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள், ஈழத்தமிழர்கள் அரசியலை தங்களின் சுயலாபத்திற்காக அந்தந்த நேரங்களில் பேசிவிட்டு அவரவர் ஆட்சி காலங்களில் கொடுங்கோல் சட்டங்களையும் கொடுங்கோல் அடக்குமுறைகளையுமே அம்மக்கள் மீது இதுவரை காலமும் திணித்து வந்திருக்கி றார்கள்.

திமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட சிறப்பு முகாம் களை ஒட்டுமொத்தமாக அகற்றுவோம் என்று உறுதியளித்த ஜெயலலிதா அவர்கள் ஆட்சிக்கு

வந்த பிறகு திருச்சி, செங்கல்பட்டு, தஞ்சாவூர், வேலூர் என்று பல்வேறு இடங்களில் இன்னும் பல சிறப்பு முகாம்களை திறந்து வைத்ததே கடந்த காலங்களில் வரலாறு. பிறகு பல்வேறு செயல்பாட்டாளர்கள், பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு பல பகுதிகளில் இருந்த சிறப்பு முகாம்கள் மூடப்பட்டு இன்று திருச்சியில் இருக்கும் சிறப்பு முகாம் மட்டும் இயங்கி வருகிறது.

## சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப் படுவோர் யார்:

2009 போருக்குப் பிறகு இன்றும் இந்த கட்டமைப்புக்கு கீழ் கைது செய்யப்படும் பெரும்பான்மையானவர்கள் யார் என்று பார்த்தால் இந்தியாவில் இருந்து வெளியேற முயற்சித்தார்கள், கடவுச்சீட்டு எடுத்தார்கள், எடுக்க முயற்சித்தார்கள் போன்ற குற்றப்பிரிவின் கீழ் முகாம் பதிவுகளிலும், வெளிப் பதிவுகளிலும் வாழ்ந்த, இங்கு பிறந்து வளர்ந்த ஈழத் தமிழ் அகதிகள் அல்லது ஓரிரு வயதில் இந்தியாவிற்கு குடும்பத்துடன் புலம்பெயர்ந்து வந்தவர்கள் வயதானவர்கள். அடிப்படையில் தாங்கள் வாழும் ஒரு நாட்டில் முப்பது ஆண்டுக்கு மேலாக வாழ்ந்தும் அடிப்படை உரிமைகள் அற்றவர்களாக வாழும் நிலையில் அந்த நாட்டை விட்டு வெளியேறி தங்கள் வாழ்வின் அடுத்த பகுதியையாவது மேம்படுத்த வேண்டும் என்று எண்ணியதும் முயற்சித்ததும் தான் இவர்களின் மீது இருக்கும் அதிகப்படியான குற்றச்சாட்டுகள். அகதிகளுக்கான சட்டங்களில் இந்தியா கையொப்பமிடா விட்டாலும் அடிப்படையான மனித உரிமைச் சட்டத்தை ஏற்றுக் கொண்ட நாடாக இருக்கும் பட்சத்தில் அச்சட்டத்தின் படி பாதுகாப்பு கோரி ஆபத்தான நிலையில் எந்த வழியிலும் தஞ்சம் கோரி வரும் மக்கள் சரியான முறையில் நடத்தப்பட்டு அவர்களுக்கான அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அடிப்படை உரிமையை கூட முப்பது ஆண்டுகாலமாக வழங்காமல் வைத்திருக்கும் இந்திய அரசுதான் அதே சட்டம் என்ற பெயரில் மேலும் மேலும் அந்த மக்களை ஒடுக்கிக்கொண்டிருக்கிறது.



இதில் "நாட்டைவிட்டு வெளியேற முயற்சித்தவர்கள்" என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் பலர் கைது செய்யப்பட்டு ஆண்டுக்கணக்காக சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதாவது 'தாங்கள் வெளிநாடு செல்ல வேண்டும் என்று எண்ணிய குற்றத்திற்காக'. அந்த எண்ணத்தைக் கடந்து எவ்வித ஆதாரங்களும் அற்ற நிலையில் கைது செய்யப்பட்டு (வழக்கு விசாரணை முடிந்தும்) இருப்பவர்களும் உள்ளே இருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களில் முழுமையான தண்டனை காலத்துக்கு உட்படுத்தி அவர்களுக்கான வழக்குகளை நடத்தி தண்டனை முடித்த பிறகு சிறப்பு முகாம் என்னும் கட்டமைப்புக்குள் கொண்டு வந்து போடப்பட்டவர்கள்.

## சிறப்பு முகாமில் இருக்கும் பிரச்சனைகள்

சிறப்பு முகாம் என்றால் எதோ சொகுசாக அமைக்கப்பட்டிருக்கும் விடுதி என்று பெயரை வைத்து எண்ணிவிட தோன்றும். ஆனால் எதார்த்தமோ 3 அடுக்கு பாதுகாப்பு மின்சார வேலி, ஒரே அறைக்குள் 3,4 பேர் கழிவறையோடு சேர்த்து அடைக்கப்பட்ட சூழல் கொடுக்கப்படும் 175 ரூபாவை வைத்து அவர்களே சமைத்து உண்ண வேண்டும். அதுவும் ஒரு அடிப்படை அடுப்பு வசதிகள் இல்லாமல் இன்றும் இத்தனை ஆண்டுகளும் எலக்ட்ரிக் அடுப்பில் மூன்றுவேளை உணவுகளை சமைத்து உண்ணுகிறார்கள். அந்த அடுப்பில் சமைப்பதன் சிரமத்தால் மூன்று நேரத்தில் ஒரு வேளை மட்டுமே சமைத்து உண்ணுவதும் அதனால் பலருடைய உடல் பல்வேறு விதமான உபாதைகளுக்கு உட்பட்டிருப்பதுமாக என்று அவர்களது நாட்கள் போய்க் கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் 175 ரூபாய்க்கான பொருட்கள் இவர்களுக்கு வெளியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற சூழலால் அதிக விலையில் வைத்து விற்பது அதிகாரிகளே! அந்தப் பணத்தை சுரண்டுவதும் அதற்கான வேலைகளை செய்வதும் அங்கு நடக்கிறது. அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு மாதம் ஐயாயிரம் ரூபாய் செலவழித்து அத்தனை அதிகாரிகளை, பாதுகாப்பு வலயங்களை, பராமரி-



ப்பதற்கான செலவுகளைச் செய்து ஒரு அரசு இம் மக்களை வைத்திருக்கும் அளவுக்கு மாபெரும் குற்றவாளிகளா இவர்கள்? அதை மீறி அடைக்கப்பட்டு இருப்பதற்கான உண்மை காரணங்கள் என்ன என்பது தீவிரமாக யோசிக்கப்படவேண்டிய ஒன்று. மேலும் பெரும்பான்மையாக உழைக்கும் வயதில் இருப்போர் உழைத்து தங்களையும் தங்கள் குடும் பத்தையும் நல்ல முறையில் பார்க்க வேண்டும் என்று விரும்புவோர் எவ்வித வேலையும் செய்யாமல் பல ஆண்டுகளாக இந்த பணத்தை மட்டும் கொடுத்து 'இதில் வாழ்ந்து கொள்' என்று சொல்வதன் ஊடாக உடல்நல பிரச்சனைகளோடு சேர்த்து உளவியல் பிரச்சினைகளையும் நாளுக்கு நாள் அதிகமாக சந்தித்து வருகின்றனர்.

இவை மிகக் குறுகிய எண்ணிக்கையில் குறிப்பிடும் உள்ளிருக்கும் பிரச்சினைகளாக இருக்க, இவர்களின் குடும்பங்களாய் வெளியில் வாழும் மக்கள் அனுபவிக்கும் துயரங்கள் எண்ணற்றவை. சிறப்பு முகாம் எனும் கட்டமைப்பில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் இளம் வயது உடையோர் குடும்பத் தலைவர்கள். பெரும்பான்மையாக கூலித் தொழிலாளர்களான இவர்கள் பல ஆண்டுகளாக இத்தகைய சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டு இருப்பதால் அவர்களின் குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். அதுவும் கொரோனா காலத்தில் இவர்களுக்குப் பின் குடும்ப பொறுப்பை சுமக்கும் பெண்கள் வேலைகளுக்குச் செல்ல முடியாமல் குடும்பத்தின் செலவுகளை பிள்ளைகளை பார்த்துக் கொள்வதில் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். இளம் குடும்பங்களில் பிரிவ் கணவன் இவ்வாறு காரண மற்று அடைக்கப்பட்டிருக்கும் நிலையில், வெளியில் இருக்கும் பெண்கள், அவர்களது பிள்ளைகள், வயதான தாய், தகப்பன் முகாம்களிலும் முகாமுக்கு வெளியிலும் சந்திக்கும் சொல்ல முடியாத துயரங்கள் பல.

சிறப்பு முகாம் என்னும் கட்டமைப்பு இன்றைக்கும் செயல்பாட்டில் இருப்பது குற்ற வழக்குகளில் ஈழத் தமிழர்களை கைது செய்வதற்காக மட்டுமல்ல, மாறாக, அம்மக்களுக்கு இந்த அரசுகள் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டிய அச்சுறுத்தலை பாதுகாப்பதற்குமே ஆகும். ஆரம்ப கட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை, அதில் இணக்கமாக செயல்படுகிறவர்களை கைது செய்கிறோம் என்ற பெயர் வழியில் ஆரம்பிக்கப்பட்ட சிறப்பு முகாம், 2009 இல் போர் முடிந்து 12 ஆண்டு காலம் ஆகியும் அதே கட்டமைப்பை நிறுவுவதற்கும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் முகாம்களில் வாழும் மக்கள் தங்கள் உரிமைக்





கான குரல்களை எழுப்ப விடாமல் அச்சுறுத்தி வைப்பதற்கும் தேவைப்படும் கருவியேயாகும்.

அதனாலேயே இங்கிருக்கும் ஈழத்தமிழர்கள் தங்களின் நீண்ட நாள் கோரிக்கையான குடியுரிமைக் கோரிக்கையைக் கூட கேட்க முடியாமல் இருப்பதற்கும், குடியுரிமை திருத்தச் சட்டங்கள் ஈழத் தமிழர்களை நிராகரித்து வந்திருந்த போதும் கூட ஒரு தார்மீகமான குரல்களை எழுப்ப முடியாமல் இருப்பதற்குமான காரணங்கள். மீறிக் கேட்டுவிட்டால் புலனாய்வுப் பிரிவு வந்து பிடித்துவிடும் சிறப்புமுகாமில் போட்டுவிடுவார்கள் நாம் எந்நேரமும் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம் நமக்கு முகாம்களில் இருக்கும் பதிவிற்கு குந்தகம் விளைந்துவிடும் இப்படியான பயங்களை அந்த மக்கள் மத்தியில் நிரந்தரமாக வைத்திருப்பதற்கு இந்த அரசுகளுக்கு சிறப்பு முகாம் போன்ற கட்டமைப்புகள் தேவைப்படுகிறது.

## தமிழ் அகதிகளும் சந்தர்ப்பவாத கட்சிகளின் நிலைப்பாடுகளும்

நடக்கும் போராட்டங்களோ அவர்களின் கோரிக்கைகளோ இந்த அரசுகளின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை, கேட்க மறந்த செவிகளாகவே நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை போராடும் மக்களும் ஈழத்தமிழ் முகாம்களில் வாழும் மக்களும், புலம்பெயர் தேசங்களில் இருப்போரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களின் குடியுரிமை கோரிக்கையை தங்களின் அரசியல் அறிக்கைகளில் மட்டும் போட்டுவிட்டு செயல் வடிவமாக எந்தவித செயல்களிலும் இறங்காமல் இருக்கும் கட்சிகளை நம்பி இனிப் பயனில்லை. ஈழத்தமிழர்களுக்காக பேசுகிறோம், இனவழிப்பு நடந்ததற்காக பேசுகிறோம் என்று மேடைக்கு மேடை பேசிவிட்டு அந்த இனப்படுகொலையின் எச்சங்களாக இருக்கும் மக்களின் போராட்டங்களுக்கு தேவையான நேரத்தில் துணை நிற்காமல் இருக்கும் சந்தர்ப்பவாத கட்சிகளை நம்புவது மக்களின் அறியாமை.

## செய்ய வேண்டியது என்ன:

இன்றைக்கு சிறப்பு முகாமில் இருக்கும் அகதிகள் 20 நாட்களாக தங்களின் விடுதலை வேண்டி

போராடிக்கொண்டிருக்கிறார்கள். தற்போது நடந்து கொண்டிருக்கும் போராட்டம் அதில் இருக்கும் 78 கைதிகளை விடுதலை செய்வது என்ற கோரிக்கையோடு மட்டும் சுருங்கி விட முடியாது, சுருக்கக் கூடாது. சிறப்பு முகாம் எனும் இந்த சித்திரவதைக் கூடம் முழுமையாக அகற்றப்படும் வரை இத்தகைய நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் அம்மக்கள் மீது திணிக்கப்பட்டு கொண்டே இருக்கும்.

ஆகவே இன்றைக்கு நடந்து கொண்டிருக்கும் சிறப்பு முகாமின் போராட்டத்தை கையில் எடுப்பதோடு முகாம் மக்களின் பிரச்சினைகளை வெகுமக்கள் மத்தியில் கொண்டு போக வேண்டிய காலத்தின் கட்டாயம் இப்போது இருக்கிறது. மனுக்கள் கொடுப்பது, கெஞ்சி கேட்பது போன்ற விடயங்களை விடுத்து இயங்கும் மக்கள் அமைப்புகள், செயல்பாட்டாளர்கள் இணைந்து தொடர் போராட்டத்தை சிறப்பு முகாமை அகற்றுவதற்கான கோரிக்கைகள், ஈழத் தமிழ் மக்களுக்கான குடியுரிமை கோரிக்கைகளை முன்வைப்பதனூடாக நடத்தப்படவேண்டும்.

உலகம் முழுக்க போர்களை உருவாக்கும் நாடுகள் போருக்கான ஆயுதங்களை விற்கும் நாடுகள், போரை நடத்தும் அதிகார வர்க்கத்திற்கு துணைபோகும் நாடுகள்தான் போரினால் உருவாக்கப்பட்டு துரத்தி அடிக்கப்படும் மக்களையும் கீழ்மையாக நடத்துகிறது. ஆஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடுகளில் கூட இரண்டு வயது குழந்தை அகதியாய் இருப்பதால் மட்டும் அடிப்படை மருத்துவ உதவி கூட மறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. இத்தகைய நாடுகள், வளங்களை சுரண்டிக் கொழுக்கும் அதிகார வர்க்கங்கள் ஒருபோதும் ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களை, அவர்களுக்கான அரசியலை முன்னெடுக்காது.

ஆனால் அத்தனை ஒடுக்குமுறைகளையும் உடைப்பதற்கான நகர்வுகள் குறைந்தபட்ச உரிமைகளை வென்றெடுப்பதற்க்கான பாதைகள் மக்கள் போராட்டங்கள் செயல்பாட்டாளர்களின் அமைப்புகளின் தொடர் பிரச்சாரங்களினூடாகவே இதுவரை காலமும் நடந்தேறியுள்ளது. ஆஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாட்டிலும் அங்கு பிறந்து வளர்ந்த சிறுபிள்ளைகளைக் கூட அகதிக் கோரிக்கை ஏற்கப்படாமல் திரும்பி அனுப்பப்பட இருந்த நிலையில் தொடர்ந்து அங்கு நடத்தப்பட்ட போராட்டங்கள் அகதிகளுக்கான ஆதரவு பிரச்சாரங்கள் அக்குடும்பம் வசித்த பகுதி மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆஸ்திரேலிய மக்களின் ஆதரவுகள் அந்த குடும்பத்தை நாடு கடத்துவதில் இருந்து தடுத்து வைத்துள்ளது. பல ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்த அகதிகளை விடுவிப்பதற்கான வழிகளை வகுத்துக் கொடுத்துள்ளது.

இந்தியாவிலும் கூட எண்ணிக்கையில் அதிக அளவு இருந்த சிறப்பு முகாம்களை மூடுவதற்கு இங்கே நடந்த போராட்டங்களே காரணம். இன்றளவும் அகதிகளின் பிரச்சினைகளாகட்டும் ஒடுக்கப்படும் மக்கள் போராட்டங்களாகட்டும் மேலைநாடுகளில் மக்கள் பக்கம் நின்று பல உரிமைகளை வென்றெடுப்பதற்கான தளங்களை உருவாக்கிக் கொடுப்பது அங்கிருக்கும் இடதுசாரிய அமைப்புகளும் சோசலிசக் கட்சிகளும் புரட்சிகர செயல்பாட்டாளர்களுமே! உழைக்கும் மக்கள் இன மத மொழி அடையாளங்களால் பிளவுபட்டுக் கிடக்கும் இந்த நிலையில் மக்களுக்கான போராட்டங்களை ஒன்றிணைத்த தளத்தில் இணைப்பதற்கான அரசியல் பணிகளை இங்கிருக்கும் இடதுசாரி அமைப்புகள் சோஷலிசக் கட்சிகள் செய்ய வேண்டும்.

மக்கள் போராட்டங்களால், உழைக்கும் மக்களின் ஒன்றுகூடுதலால் மட்டுமே அதிகாரவர்க்கத்தின் ஒடுக்குமுறைக்கு எதிரான மாற்றங்களை சாத்தியப்படுத்த முடியும் என்பதை கடந்தகால போராட்டங்களின் வரலாறுகள் மூலம் படிப்பினையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உரிமைகளுக்காக போராடும் ஒவ்வொரு தரப்பு மக்களோடு நின்று அவர்களை வலுப்படுத்துவதோடு இங்கிருக்கும் அரசியல் மாற்றத்தை நோக்கியும் நாம் பயணப்பட வேண்டும். ஓட்டுக்களைப் பெறுவதற்காக சாதியப் பிரச்சினைகளையும் இனப் பிரச்சினைகளையும் மற்றும் பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளையும் பேசுபவர்கள் அத்தகைய மக்களுக்கு பிரச்சினைகள் உருவாகும் பொழுது ஒதுங்கிக் கொள்வார்கள். அத்தகைய சக்திகளை அடையாளம் கண்டு அவர்களைப் புறந்தள்ளி வைப்பதோடு போராடும் இணக்கமான சக்திகளை இணைத்து அடுத்த கட்டமாக நகர்வதே உண்மையான மாற்றத்தை வழங்கும்.

## நமது கோரிக்கைகள்

விரும்பும் ஈழத்தமிழ் அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

சிறப்பு முகாமில் இருக்கும் ஈழத்தமிழ் அகதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

சிறப்பு முகாம் என்னும் சித்திரவதை முகாம்கள் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.

முகாம் மக்கள் மீதான அரசு அடக்குமுறை, கண்காணிப்பு போன்றவற்றை தளர்வு செய்ய வேண்டும்.

# ஏக்கம்

மிதயா கானவி



இது கதையில்லை....

பள்ளித்தோழியிடமும், அவள் குழந்தை தாரனா விடமும் இருந்து விடைபெற்றுச் சென்று கொண்டிருக்கின்றேன். ஆனாலும், தாரனா இரவு சொன்ன கதையிலிருந்து என்னால் மீண்டு வரமுடியவில்லை...

புகையிரதப் பயணத்தில் வழமையாகப் படிக்கும் புத்தகத்தைக்கூட திறக்க மனமில்லை. வெண்பனி பொழியும் தேசத்தின் அழகுகூட பாதைமுழுவதும் பாரமாய்த் தெரிந்தது. விடுமுறையின் இரு நாட்களை, லூசேர்ன் (Luzern) மாநிலத்தில் உள்ள அவர்களது வீட்டில் கழித்தது மிகவும் மகிழ்ச்சியே... தொலைபேசியில் மட்டும் பேசிப் பழகிய என் தோழியின் குழந்தை நேரில் பார்த்ததும் எங்களுடன் நன்கு ஒட்டிவிட்டாள். இரண்டு நாட்களும் மகிழ்வாய் கழிந்தன.

பக்கத்திலிருக்கும் ஜெயா அக்கா எனது நாவலை முழு மூச்சாகப் படித்துக்கொண்டிருக்க... தாரனா அடிக்கடி என்னிடம் ஓடி வந்து "அன்ரி உங்கட புக் (Book) நல்லா இருக்கு, நீங்கள் நல்லா எழுதியிருக்கிறீர்கள்" என்று கொஞ்சினாள். அவளுக்கு எட்டு வயதுதான். வயதை மேவிய ஆளுமை, மற்றவர்களை புரியும் தன்மை மேலோங்கிக் கிடந்தது.

இரவு உணவை முடித்து விட்டு படுக்கைக்கு தயாரானோம். தோழியின் உடல் நிலை சரியில்லாமல் இருந்ததால் நேரத்திற்கு தூங்கிவிட்டாள். தாரனா எங்களுடன் விளையாடிக்கொண்டிருந்தாள்.

திடீரென அவள்தான் தொடங்கினாள் "அன்ரி கதை சொல்லுங்க" என்று....

"இல்லை, நான் முதல் சொல்லுறன். பிறகு நீங்கள்"

என்றவள் என் அனுமதிக்குக் காத்திருக்காமல் கதையைத் தொடங்கினாள்...

”ஒரு பெரிய காட்டில் ஒரு அம்மா முயலும் குட்டி முயலும் இருந்தது. அப்பா முயல் காணமல் போய் விட்டது. அப்பாவைத் தேடி அம்மா முயல் நல்லா களைத்துப் போட்டுது” என்று சொல்லத் தொட ங்கவே என்னால் இயல்பாய் சுவாசிக்க முடியாத தைப்போல் தவித்துக்கொண்டிருக்க...

”அன்ரி”... என்றாள் அதட்டலாக ”நீங்க கேட்கவி ல்லையா?” ”கேட்கிறேன் சொல்லுங்க குட்டி அம்மா” என்றேன். அவளை இடையில் நிறுத்த முடியவில்லை

”அந்தக் காட்டில் ஒரு பொல்லாத சிங்கம் இருந்தது”. ஐயோ இனி என்ன சொல்லப்போறாள் என்ற ஏக்கத்துடன் ”.. ”ம்ம்” என்றேன்.

அப்போது அவளுக்கு லண்டனில் இருந்து ஒர் அழைப்பு வந்தது. அப்பாடா... என்று எனக்கும் பெருமூச்சு வந்நது. ஆனால், ”ஹலோ மாமா நான் பிசியா இருக்கிறன் வையுங்கோ. நாளைக்கு எடு-க்கிறன்” என்றவள்...

”அன்ரி மிச்சத்தைக் கேளுங்க” என்று உறுக்கி னாள்.

”சரி” என்றவுடன் கட்டிப்பிடித்து மாறிமாறி முத்தம் தந்தவள் தொடர்ந்தாள்.

”சிங்கத்துக்கு சரியான பசி. யாராவது உணவு-க்காக போகவேண்டும். எல்லா மிருகமும் சேர்ந்து குட்டிமுயலைப் போகச் சொல்லிட்டினம்,”

மீண்டும் அதே அழைப்பு...

இந்த முறை கெஞ்சலாகக் கேட்டாள் ”என்ர செல்ல மாமால்ல. இனி எடுக்காதிங்கோ. நான் நித்திரை. நாளைக்கு எடுங்கோ” என்றவள் தொட ர்ந்தாள்....

குட்டி முயல் போய்க்கொண்டிருந்தது யாரும் அழவில்லை அம்மா முயல் மட்டும் அழுதது. என்றவளுக்கு...

எந்த ஆறுதலையும் சொல்லமுடியவில்லை!!! எட்டே எட்டு வயதில் இவ்வளவு தெளிவாக இந்த சமூகத்தைப் புரிந்து விட்டாள் என்பதை எனக்கு உணர்த்தியது. எனது குழந்தைகளும் அவளது கதை கேட்டு புரிந்தவர்களாக அமைதியானார்கள்.

”இனி வேற விளையாடுவோமா?” என்றேன்...

”அன்ரி, நீங்க சொன்னிங்கள், நான் சொன்ன பிறகு சொல்லுவன் எண்டு. சொல்லுங்க” என்றாள்...

இப்போது அடுத்த கதை சொல்ல என்னால்



முடியவில்லை. அவள் சொன்ன கதையிலிருந்து என்னால் வெளிவர முடியவில்லை.

”சரி, அடுத்தது கவி அக்கா, கானு அக்கா. கடை-சியா அன்ரி. ஓகேயா?” என்றேன்.

”ஓகே நீங்கள் பெரிய கதை சொல்லவேணும், நான் நித்திரை கொள்ளும் வரை சொல்ல வேண்டும்” என்றாள்... ”ஓம்” என்று வாக்கு கொடு-த்தேன், சற்று நிமிடத்தில் அவள் தூங்கிவிட்டாள்... என் தூக்கம் அவள் கதையில் தொலைந்தது!!!


இன்னும் ஓரிரு நாட்கள் அவளுடன் தங்கிவிட மனம் விரும்பியது. நாளை பாடசாலை என்பதால் விடை பெற்றுக்கொண்டோம் ஜெனிவா நோக்கி தாரனாவின் நினைவுகளோடு....

**குறிப்பு: தாரனாவின் தந்தை 2009ஆம் ஆண்டு காணமல் ஆக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது!**

# மனித உரிமைகள் ஒரு விளக்கம்

ந. மாலதி

**மனித உரிமைகள் என்ற சொல்லுக்குரிய விளக்கங்களை தொடராக சில ஆக்கங்களில் எழுதலாம் என்ற எண்ணத்தில் பின்வரும் பட்டியலை ஆரம்பமாக வைத்து சில ஆக்கங்கள் தொடராக வருகிறது.**





## மனித உரிமைகள்

### பாகம்–உ

இது பற்றி பேசாதவர்கள் கிடையாது. இது பற்றி அரசுகளும் அமைப்புக்களும் மேலும் விரிவாக சொல்லுவார்கள். இதுபற்றி மேற்கு நாடுகளில் ஒரு நூறு ஆண்டுகளுக்கு பேசப்பட்டாலும், 1948 இல் UDHR என்று சுருக்கமாக அழைக்கப்படும் “அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்” (Universal Declaration of Human Rights) ஐநா பிரகடனப்படுத்திய பின்னர் தான் இது உலகளாவிய கவனத்தை பெற்றது. இதில் 30 மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. மனிதர் யாவருக்கும் ஒரே மாதிரியாக இந்த உரிமைகள் உள்ளன. இந்த உரிமைகள் நாட்டின் சட்டங்களில் பிரதிபலிக்க வேண்டும். அதில் சொல்லப்பட்ட உரிமைகளில் பின்வருவனவும் அடங்கும். உயிர் வாழ்வதற்காக உரிமை, அடிமையாக இல்லாமல் இருப்பதற்கான உரிமை, சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமல் இருப்பதற்கான உரிமை, சட்டத்தின் முன் பாதுகாக்கப்படுவதற்கான உரிமை, கல்வி கற்பதற்கான உரிமையும் எல்லோருக்கும் இலவச ஆரம்ப கல்வி உரிமையும், உணவு உடை இருப்பிடம் உரிமை, வேலை செய்யும் உரிமை, ஓய்வு நேரமும் விடுமுறைகளுக்கும் உரிமை என்று நீள்கிறது இந்த பட்டியல்.

உலகளாவிய மானிட சமூகத்தில் மனிதர்கள் யாவரும் ஒரேயளவு சிறப்பு பொருந்தியவர்கள் என்ற எண்ணத்தை பரப்பியதில் இந்த பிரகடனத்தின் பங்கு அதீதமானது. இந்த “மனித உரிமைகள்” என்பதன் கருவூலமே ஐநா தான். இக்கட்டுரை மையநீரோட்டத்தில் மனித உரிமைகள் என்ற கருத்தாக்கம் எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகிறது என்பதையே பேசும்.

ஐரோப்பாவில் அடுத்தடுத்து 30 ஆண்டுகளுக்குள் நடந்த இரண்டு போர்கள் உலகப் போர்கள் என்று அழைக்கபடுகின்றன. முதலாம் உலகப் போருக்கு பின் “நாடுகளின் கூட்டு” (League of Nations) என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் முக்கிய நோக்கங்களாக போர்களை தவிர்ப்பதும் தடுப்பதும் அமைதியை நிலை நாட்டுவதும் இருந்தன. அதன் நோக்கத்தில் அது வெற்றி அடையாததால் இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் அது கலைக்கப்பட்டு 1945 இல் 51 நாடுகள் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது.




ஐநா உருவாக்கப்பட்ட போது அதன் நோக்கங்கள் - உலகில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவது, நாடுகளுக்கிடையே நட்பை வளர்ப்பது, சமூக மேம்பாட்டை வளர்ப்பது, வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது, மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது என்பனவாகும். இன்று ஐநாவின் கட்டமைப்பை இப்படம் விளக்குகிறது. இதன் நான்கு முக்கிய பகுதிகளாக இருப்பவை

1) ஐநா பொதுச்சபை

2) ஐநா பாதுகாப்புச்சபை

3) ஐநா செயலகம்

மற்றும் 4) பொருளாதார சமூக கவுன்சில்.

அதில் நமக்கு பழக்கமான மனித உரிமை கவுன்சில் ஐநா பொதுச்சபையின் கீழும், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் ஐநா செயலகத்தின் கீழும் இருப்பதை பார்க்கலாம். இதுதான் மனித உரிமைகள் பள்ளி கொண்டிருக்கும் கருவூலம்.

UDHR அதாவது அனைத்துல மனித உரிமைகள் பிரகடனப்படுத்திய பின்னர் இன்னும் பல மனித உரிமைகள் சார்ந்த பிரகடனங்களை ஐநா செய்தது. அவற்றில் கீழே தரப்படுபவை முக்கியமானவை. இவற்றிலும் முதல் மூன்றும் மிக முக்கியமானவையான கருதப்படுகின்றன.

ICERD (1965) – இனரீதியான பாகுபாடுகளை களைவதற்கான ஒப்பந்தம்

ICCPR (1966) - சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான ஒப்பந்தம்

ICESCR (1966) – பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுக்கான ஒப்பந்தம்

CEDAW (1979) – பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் பாகுபாடுகளை களைவதற்கான ஒப்பந்தம்

CAT (1984) – சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமாகவும் ஒருவரை இழிவாக கையாளும் தண்டனைகளுக்கு எதிரான ஒப்பந்தம்

CRC (1989) – சிறுவர்கள் உரிமைகளுக்கான ஒப்பந்தம்

ICMW (1990) – புலம்பெயர்ந்து தொழில் செய்வோரினதும் அவர்கள் குடும்பத்தினரதும் உரிமைகளுக்கான ஒப்பந்தம்

CPED (2006) – காணாமல் ஆக்கப்படாமல் பாதுகாப்பதற்கான ஒப்பந்தம்


CRPD (2006) – மாற்று வலுவுள்ளோர் உரிமைகளுக்கான ஒப்பந்தம்

இவையெல்லாம் அழகாகத்தான் இருக்கின்றன ஆனால் இவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்று நீங்கள் கேட்கலாம். ஐநா உறுப்பினராக உள்ள நாடுகள் இவற்றை ஏற்றுக்கொள்வதாக கையொப்பமிடும். (சிறீலங்கா ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்களின் பட்டியலையும் இங்கு பார்க்கலாம்.)

அதன் பின்னர் அதை ஏற்றுக்கொண்ட நாடுகளில் மட்டும் அவை பின்பற்றப்படுகின்றனவா என்று ஐநா கண்காணிக்கும். மனித உரிமை பிரகடனங்களில் கைச்சாத்திட்ட நாடுகள் தங்கள் சட்டங்களிலும் அவற்றை உள்ளடக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தவறுகள் நடந்தால் ஐநா அதை வெளிப்படுத்தும் அவ்வளவுதான். இதற்கு மேல் ஐநாவுக்கு அதிகாரமோ பலமோ கிடையாது. ஆனால் மேற்குலகம் நினைத்தால் மட்டுமே ஐநாவை ஆதாரமாக கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஐநாவின் முடிவென்பது ஐநா பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் ஐந்து வல்லரசுகளின் (ஐ-அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, ரசியா, மற்றும் பிரான்ஸ்) முடிவுதான். அண்மைக் காலங்களில் ஐ-அமெரிக்காவும் மேற்குலகமும் சேர்ந்து தன்னிச்சையாக ஐநாவுக்கு வெளியேயும் இராணுவ நடவடிக்கைகள் எடுத்த சம்பவங்களும் அதிகம் உண்டு.

இதையும்விட, ஐநாவுக்கு வெளியே உருவாக்கப்பட்ட ஜெனிவா பிரகடனங்கள் போர்க்காலத்தில் இடம்பெறும் கொடுமைகளை தடுப்பதற்காக உருவாக்கப்பட்டன. இவற்றை கண்காணிக்க ஐ.சி .ஆர்.சி என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டது. அப் பிரகடனங்களையும் ஏற்று நாடுகள் கையொப்ப மிட்டன.

மனித உரிமைகள் பற்றி இலகு தமிழில் படிப்பதற்கு இணையத்தில் அதிகம் கிடைப்பதில்லை. ஐநா வின் மொழியாக்கங்கள் கொடூரமான தமிழிலேயே உள்ளன. அதுவும் அரிதாகவே உள்ளன. Vikaspedia என்பது இந்திய அரசால் பொதுமக்களுக்கு தகவல் கொடுப்பதற்காக நடத்தப்படும் இணையம். இதில் தமிழ் மொழியிலும் படிக்கலாம். மனித உரிமைகள் அறிமுகம் மனித உரிமைகளின் வகைகள் மற்றும் மனித உரிமைப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள 30 உறுப்புகள் என்ற மூன்று தகவல்கள் படிக்ககூடியவை.




மனித உரிமைகள் பற்றி பேசும் போது அரசசார் பற்ற இரண்டு மனித உரிமை அமைப்புக்களையும் குறிப்பிட வேண்டும். அவைதான் சர்வதேச மன்னிப்பு சபையும், மனித உரிமை கண்காணிப்பகமும். இவற்றையும் விட ஏராளமான மனித உரிமை அமைப்புக்கள் உலகில் இயங்குகின்றன. மனித உரிமையை ஒரு தொழிலாக்கியதில் இவைகளின் பங்கு முக்கியமானது என்று சொல்வார்கள். இருந்தும், மேலே குறிப்பிட்ட ஒப்பந்தங்களில் ஒரு இனத்தின் உரிமைக்காக போராடும் எம்மைப்போன்ற மக்களுக்கு அவசியமானது ICESCR எனப்படும் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளுக்கான ஒப்பந்தம். உலகில் பெரிதாக அறியப்பட்ட எந்தவொரு மனித உரிமை அமைப்பும் ஐநா உட்பட இந்த ஒப்பந்தத்தை கண்டு கொள்வதில்லை. இதைக்கண்டு கொள்வது கடினமானது என்பது அவர்களின் வாதம்!!

மனித உரிமைகள் என்ற கருத்தாக்கம் மைய நீரோட்டத்தில் எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகிறது என்பதை இக்கட்டுரை விபரித்தது.

பகைவருக்குள் வாழ்ந்து அவர்கள்
உயிர் சாய்த்து உயிர் எரித்த
உறவாய் முகம் மறைத்த புலியாய்
உணர்வுகள் புதிதாய்
வாழாது வாழ்கின்ற
கரும்புலிகள் இவர்கள்



# உயிரின் உறவுகள்



உயிரோடு உறவான
நினைவுகளில் கலந்து,
உன்னதமான இலட்சிய
கனவுகளோடு
வெடிகுண்டினை சுமந்து
கந்தக காற்றில்
கலந்திட்ட போது
காற்றினில் கலந்து
காதினில் சொன்ன
சேதிகள் கேட்டேன்!!!


உங்களுக்காக உயிரை
தந்தோம்!!!
வாழ்வுக்காக நாம்
வழி சமைத்தோம்!!!
மலர்ந்திடும் பூக்கள்
மகிழ்வாய் வாழ
விதையாகி போகிறோம்!!

சதிவலை பின்னலில்
சத்தமின்றி – யுத்தம்
மௌனிக்க நாம்
கண்ணீர் விழிகளோடு
கலங்கி நிற்கிறோம்

அடக்கு முறையும்,
அடிமைத்தளையும்,
போதைப் பொருளும்,
வாள்வெட்டும்..
மலர்ந்திடும் பூக்கள்
மொட்டிலே கருக..
கண்ணீர் வடிக்கிறோம்.

கந்தக காற்றில்
எமக்காய்க் கலந்த
உங்கள் நினைவில்
நெஞ்சம் வெடிக்க..

– அம்முக்குட்டி –


தலைகளை மீண்டும் நிமிர்த்தி
தம்மைக்கொடை தந்த
தன்னிகரில்லாத் தெய்வங்களின்
தாள்களைத் துணைகொண்டு
தனித்து நின்ற
தடங்கள் போதுமென்று
குனிந்த தலைகளை நிமிர்த்தி
கூட்டாய்த் துணிந்தெழுந்து
கூடித்தேரிழுப்போம்...